யாழ்ப்பாணம் கல்லூரி ஒரு நூலகம்.
மாநகரசபை மன்றம் யாழ்ப்பாணம்

இலங்கையில் செய்திப் பத்திரியாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the GP

புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

புதிய கண்ணோட்டம்

வெளியீடு: 44 | 01 மார்கழி 1998 | விலை: ரூபா 7.00

போரையும், வன்முறையையும் தமிழர் தேசம் விரும்பவில்லை.

மாவீரர் தின செய்தியில் பிரபாகரன் தெரிவிப்பு.

ஆண்டுதோறும் விடுதலைப்புலிகள் கடைப்பிடிக்கும் மாவீரர் நாளை முன்னிட்டு விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரன் ஆற்றிய சுமார் 25 நிமிட உரையில் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார். அத்துடன், எமது மக்கள் துன்பத்தின் பளுவைச் சுமக்க முடியாது திணறு கிறார்கள். சாவும், அழிவும், பசியும், பட்டினியும், இடம் பெயர்ந்த வாழ்வும், இராணுவ அட்டுழியங்களும், சிறைப் பட்ட வாழ்வும் என்ற ரீதியில் நாளாந்தம் அனுபவிக்கும் துயரம் மிகக் கொடியது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சமலும் குறிப்பிடுகையில் தமிழருக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பாக சர்வதேச சமூகம் கண்டுகொள்ளாமை தொடர்பாகவும், குரலெழுப்பாமை குறித்தும் ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகளில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உரையானது வழமையான உணர்ச்சி ஊட்டல்களைக் கொண்டிருக்கும் போதும் கூட சில யதார்த்த நிலமைகளை உணர்த்துவதாகவே அவதானிகள் கருதுகின்றனர்.

ஒருபுறத்தில் மக்கள் துன்பப்படுவதாகக் கூறப்படும் அதேவேளை நாளாந்த வாழ்க்கையில் சுமுக நிலையை ஏற்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்து சீர்குலைக்கப்படும் என்பதும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அரச நிர்வாகம் நடத்தவும் நாம் இடமளிக்கப்போவதில்லை என்பதன் மூலம் பாடசாலைகள், அரசாங்க அலுவலகங்கள், வைத்தியசாலைகள், உள்ளூராட்சி அமைப்புகள் போன்ற பல நிறுவனங்களும் எதிர்காலத்தில் இராணுவ இலக்குகளாகக் கருதப்படலாம் என்பது கோடி காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் போரையும், வன்முறையையும் மக்கள் விரும்பவில்லை எனக்கூறிக்கொண்டே மக்கள் மத்தியிலுள்ள பிற அரசியற் சக்திகளுக்கு எதிரான பிரகடனங்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

"நாம் எமது மண்ணில், வரலாற்று ரீதியாக எமக்குச் சொந்தமான நிலத்தில், நாம் பிறந்து வாழ்ந்த தாயகப் பூமியில், நாம் நிம்மதியாக, கௌரவமாக சுதந்திரமாக வாழ்வதற்கு விரும்புகின்றோம். நாமும் மனிதர்கள். மனிதர்களுக்கான அடிப்படை உரிமைகளைக் கொண்டவர்கள்" என்று கூறுபவர்கள் மாற்று அரசியல் கருத்துக்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்பதற்காக ஒருசாரார் அச்சுறுத்தப்பட்டு விரட்டப்படும் சூழ்நிலை நிலவுவது துரதிஸ்டமானது என்றே அவதானிகள் கருதுகின்றனர்.

மேலும் சமாதானத்திற்குக் கதவடைக்கவில்லை எனவும், சமாதான வழியில் பேச்சுக்களை நடத்தி பிரச்சினையைத் தீர்க்கும் நாகரீகமான நடைமுறையை நாம் கைவிடவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களில் பங்குகொள்ள தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அரசு விதிக்கும் முன் நிபந்தனைகள் எதையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லையெனவும், போர் ஓய்வுக்கு கொண்டுவரப்பட்டு இராணுவ ஆக்கிரமிப்பும், பொருளாதார நெருக்குவாரங்களும் நீங்கிய இயல்பான சூழ்நிலையுமே அரசியற் பேச்சுக்கள் நடைபெறுவதற்கு உகந்தது எனவும் தெரிவித்துள்ளார்.

இவற்றை முன் நிபந்தனையாக கருதப்படக்கூடாது என்பதை வலியுறுத்தியுள்ள பிரபாகரன் அழுத்தங்களை நீக்குவது மற்றும் அரசியற் பேச்சுக்கான அடிப்படைகள் வகுப்பது என்பவை தொடர்பாகவே ஆராயத்தயார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே விடுதலைப்புலிகள் எதிர்பார்க்கும் பேச்சுவார்த்தைகள் என்பது அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு காணும் நோக்கத்தை விடவும் அன்றாடப் பிரச்சினைகளை மையப்படுத்தியதாகவே இருக்கக்கூடும். இத்தகைய நிலைப்பாடுகள் பேச்சுக்கள் தொடங்கப்படுவதற்கான ஆரோக்கியமான நிலமைக்கு இட்டுச்செல்லுமா என்பது கேள்விக்குறியே.

அத்துடன், சர்வதேச சமூகம் எமது மக்களின் இன்னல்களைக் கண்டுகொள்ளவில்லை எனவும், நாகரீக உலகத்திற்கு தலைமைதாங்கும் நாடுகள் தமிழர் மீதான அடக்குமுறைக்கு எதிராக குரல் எழுப்பத்தயங்குவது துயரம் தருகிறது எனவும், சர்வதேச சமூகம் ஏமாற்றப்பட்டு வருகிறது எனவும், அரசு பரப்பும் புரளிகளை விசாரணையின்றி விழுங்கிக் கொண்டுள்ளன எனவும் பலவாறான கருத்துக்கள் இந்த உரையில் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் விடுதலைப்புலிகள் சர்வதேச ரீதியாக அரசியலில் தாங்கள் தனிமைப்பட்டு நிற்பதை உணரத்தொடங்கியுள்ளனர் எனக் கொள்ளலாம்.

இத்தகைய தனிமைப்பட்ட நிலமைக்கு அரசாங்கத்தை மட்டும் குறைகூறமுடியாது என்பது தெளிவு. கடந்த காலங்களிலும் தற்போதும் விடுதலைப்புலிகள் கடைப்பிடிக்கும் தவறான அரசியல் அணுகுமுறைகளும் அரசியல் தவறுகளும் முக்கியமான பங்கை வகித்து வருகின்றன என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும் என்றே அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ●

தீர்வுத்திட்டத்தின் இன்றைய வடிவம் தமிழ் மக்களுக்கு திருப்தி தரக்கூடியதல்ல. ஈ.பி.ஆர்.எல்.எவ் மத்திய குழு தீர்மானம்.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பரிசீலிக்கப்பட்டு அரசாங்கத்தினால் தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வாக முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் தற்போதைய வடிவம் தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை. அதனால் இப்போதுள்ள வடிவத்தில் தீர்வுத்திட்டத்தை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியோ தமிழ் மக்களோ அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியாலும் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளாலும் முன்வைக்கப்பட்டிருந்த ஆக்கபூர்வமான ஆலோசனைகளும், திருத்தங்களும் தீர்வுத் திட்டத்தின் இறுதிவடிவம் தயாரிக்கப்படும் பொழுது கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றோம். ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முற்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை நடாத்த அரசு முயற்சி எதையும் எடுத்திருக்கவில்லை. அதனால் அரசாங்கம் தமிழ் மக்களைப் பிரதிநித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடி நீதியான, நியாயமான தீர்வை காணவும் அமுல்படுத்தவுமான ஒரு களத்தை உருவாக்க முன்வரவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய குழு நவம்பர் 2ம், 3ம் திகதிகளில் கொழும்பில் கூடியபோது மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு.

2. தமிழீழ விடுதலைப்புலிகள் தாங்கள் மட்டுமே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்வதை ஈ.பி.ஆர்.எல்.எவ் முற்றாக நிராகரிக்கிறது. ஜனநாயக மரபுகள் மதிக்கப்படும் ஒரு நாகரிக சமுதாயத்தில் ஏகப்பிரதிநிதிகள் என யாரும் உரிமை பாராட்ட முடியாது. ஏக பிரதிநிதிகள் என்ற கருத்துருவாக்கம் அதன் உள்ளடக்கத்தில் ஜனநாயக விரோத தன்மையைக் கொண்டுள்ளது. விடுதலைப்புலிகள் தாங்கள் மட்டுமே ஏகப் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்வதே அதன் தலைமைத்துவத்தின் சர்வாதிகாரப் பண்பை வெளிப்படுத்துவதாக இருப்பதாக ஈ.பி.ஆர்.எல்.எவ் கருதுகின்றது. இதனால் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு விடுதலைப்புலிகள் மதிப்பளிக்க வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எவ் வலியுறுத்துகிறது. இதன் மூலமாகவே மக்கள் மரணபயம் எதுவுமில்லாமல் தங்களை ஒழுங்கமைக்கவும் உரிமைகளுக்கான போராட்டங்களை நடத்தவும் முன்வரக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்று நம்புகின்றோம். அடக்கப்பட்டும் பயமுறுத்தப்பட்டும் வாழும் மக்கள் வெளிப்புறத்திலிருந்துவரும் அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுவதிலும் பலவீனமாகவே இருப்பார்கள் என்பது வெளிப்படையானது.

3. இந்த நெருக்கடியான கட்டத்திலாயினும் எல்லாத் தமிழ் அரசியல் கட்சிகளும் கட்சி நலன்களுக்கு அப்பாற்பட்டுச் சிந்தித்து மக்களின் நியாயமான அபிலாசைகளை பிரதிபலிக்கும் வகையில் ஒருமித்துச் செயற்பட வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எவ் விரும்புகின்றது. இந்த வகையில் மேற்கொள்ளப்பட்ட முன்னைய பல முயற்சிகள் வெற்றிகரமாக அமையாத போதும் தற்போது ஒரு புதிய முன்முயற்சி எடுக்கப்படவேண்டுமென சம்பந்தப்பட்ட சக்திகளுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் அழைப்பு விடுக்கின்றது.

தொடர்ச்சி 09ம் பக்கம் ☞

கண்ணோட்டம்

யுத்தத்திற்கான பட்ஜெட்

பெரும் ஆரவாரத்துடன் ஆரம்பமான வர்த்தகர் சம்மேளனங்களின் சமாதான முயற்சி அடங்கிப் போயுள்ளது. கொழும்பு நூலக கேட்போர் கூடத்தில் சமாதானத்திற்கான தேசிய முன்னணியின் ஆரம்ப அமர்வில் அமளி துமளிகள். "புலிகளுடன் பேச்சுவார்த்தையே வேண்டாம். பந்தெட்டி திரும்பிப்போ" என்ற சுவரொட்டிகளுக்கு மத்தியில் பிரித்தானிய அமைச்சருக்கு வரவேற்பு. என்பன போன்ற பல்வேறு செய்திகள் சமாதான விரும்பிகளுக்கும், இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு வேண்டும் என்று அவலுள்ளவர்களுக்கும் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தக்கூடியன. ஐக்கியப் பட்ட இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்படலாம் என்ற எதிர்பார்ப்பைச் சிதறடிக்கக் கூடியன. சமாதானத்தை உருவாக்க வாக்குறுதி வழங்கி பதவிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அரசாங்கமும் யுத்தத்தை முன்னெடுப்பதிலேயே குறியாகவுள்ளது என்பதையே முன்வைக்கப்பட்டுள்ள ஐந்தாவது வரவு செலவுத்திட்டமும் உணர்த்துகின்றது.

தற்பொழுது 1999ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது உள்நாட்டு வருமானத்தில் ஏறத்தாழ 25வீதமாக 47,000 மில்லியன் ரூபா யுத்தத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த பாராளுமன்றத்திலும், இப் பாராளுமன்றத்திலும் தொடர்ச்சியாக வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து வந்த தமிழர் விடுதலைக்கூட்டணியினர் இம்முறை வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் போது அதனை எதிர்த்து வாக்களித்தனர். ஆனால் யுத்தத் தினால் ஏற்படும் மனித உரிமை மீறல்கள், பொருளாதாரத்தடைகள் கைதுகள் தொடர்பாக அப்வப்போ கூக்குரலிடும் ஈ.பி.டி.பியும், புளொட்டும் யுத்தத்தை பெருமளவில் நடத்த முனையும் இவ்வரவு செலவுத்திட்டத்தை ஆதரித்து வாக்களித்துள்ளன.

புலிகளுக்கெதிரான யுத்தம், சமாதானத்திற்கான யுத்தமே தவிர தமிழருக்கு எதிரான யுத்தமல்ல என்று அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டு தொடரும் யுத்தத்தால் மிகப் பெருமளவில் பாதிக்கப்படுவது தமிழ் மக்களே. விமானக்குண்டு வீச்சுக்கள், கைதுகள், காணாமல் போதல் என்பன இன்றும் தொடர்கதையாகவே உள்ளது. யாழ்ப்பாணத்திற்கு போக்குவரத்தில்லை, வன்னிக்கு உணவில்லை, மருந்தில்லை, யாழ்ப்பாணத்தில் பொருட்கள் விலையேற்றம், கிழக்கில் மின்சாரம் இல்லை, பாடசாலை மாணவர்களும் யுத்த நடவடிக்கைகளுக்காக புலிகளால் கடத்தல் இப்படி பலசம்பவங்கள். இவையாவும் யுத்தத்தை உக்கிரப்படுத்தும் நடவடிக்கைகளே. இப்படியான யுத்தத்தை பெருமெடுப்பில் நடாத்த உருவாக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தை ஆதரிக்கும் தமிழ்க்கட்சிகளை இட்டு மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும். இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு முன்வைக்கப்பட்டால் விடுதலைப்புலிகள் அரசியல் ரீதியாக தனிமைப்படுத்தப்படலாம். இந்தவகையில் நடுவராக செயற்பட பல நாடுகள் இணங்கியுள்ளன. பிரிட்டன், அவுஸ்திரேலியா, சுவீடன், நோர்வே போன்ற பல நாடுகள் இதற்கு முன்வந்தன. ஆனால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்பதை சிறீலங்கா அரசு தொடர்ந்து நிராகரித்தே வருகின்றது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்பட்டால் குறைந்த பட்சம் தமிழ் மக்களுக்கு ஓர் சமஷ்டி ஆட்சியை வழங்குவதற்கு அரசாங்கம் நிர்ப்பந்திக்கப் படலாம். ஆனால் அப்படியான சமஷ்டி ஆட்சி முறையை வழங்குவதற்கு அரச தரப்பிலும், எதிர்க்கட்சியிலும் பல முட்டுக்கட்டைகள் ஏற்படும் என்ப தாலேயே அரசு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை எதிர்த்து வருகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்தில் இருந்து இன்றுவரை இனப்பிரச்சனையை தன்னால் தீர்க்க முடியாதென்பதையே இலங்கை அரசாங்கம் மீண்டும் மீண்டும் உணர்த்தி வந்துள்ளது. இந்திய-இலங்கை ஒப்பந்தம் கூட இந்தியாவின் திணிப்பு தவிர இலங்கை விரும்பி ஏற்றுக்கொண்டதல்ல. இதற்கு மேலாக தற்போதைய அரசுக்கும் நான்கு ஆண்டுகள் கொடுத்துப் பார்த்தாயிற்று. ஆனால் இந்த நான்கு வருடத்தில் சமாதானத்தை ஏற்படுத்தவென மக்களிடம் ஆணைபெற்று வந்த அரசாங்கம் சாதித்ததென்ன?

1994ம் ஆண்டு 25,000 மில்லியன் ரூபாவாக இருந்த யுத்தத்திற்கான செலவு 1998இல் 47,000 மில்லியன் ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதுபோதாதென மீண்டும் பாராளுமன்றத்தில் ஓர் குறை நிரப்புப் பிரேரணையை கொண்டு வந்ததன் மூலம் மேலும் 12000 மில்லியன் ரூபா யுத்தத்திற்கு ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் 1998ம் ஆண்டில் மொத்தமாக 56,000 மில்லியன் ரூபாய் யுத்தத்திற்காகச் செலவு செய்யப்பட்டது.

மீண்டும் 1999ம் ஆண்டில் யுத்தத்தை நடாத்த 47,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர 1992ம் ஆண்டில் ஒருவீதமாக இருந்த பாதுகாப்பு வரி என்பது சந்திரிகா அவர்கள் ஜனாதிபதியாக வந்த பின்னர் 1994இல் 3.5வீதமாகவும் 1997இல் 4.5வீதமாகவும் 1998 இல் 5.5வீதமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட புள்ளி விபரம் ஒரு விடயத்தை எமக்கு துலாம்பரமாக வெளிக்காட்டுகின்றது. அதாவது எத்தனை ஆயிரம் மக்கள் செத்தாலென்ன, எத்தனை ஆயிரம் இராணுவம் செத்தாலென்ன எவ்வளவு அழிவுகள் ஏற்பட்டாலென்ன, இந்த நாட்டின் பொருளாதாரம் எக்கேடுகெட்டு குட்டிச் சுவராகப் போனாலென்ன யுத்தத்தை தொடர்ந்து நடாத்துவது என்பதில் உறுதியாக உள்ளனர்கள். இப்படியான வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவளிக்கவென ஈ.பி.டி.பி., புளொட் போன்ற தமிழ்க்கட்சிகள் இருப்பதானது தமிழ் மக்களின் துரதிஷ்டமே.

ஒவ்வொரு அமைச்சரும் பாராளுமன்றத்தில் பேசும் பொழுது யுத்தம் முடிவுக்கு வந்தால், இந்த நாடு சிங்கப்பூர் மாதிரி, சுவிற்சலாண்ட் மாதிரி உருவாகிவிடும் என நாளாந்தம் புலம்புவார்கள். அதேசமயம் யுத்தத்திற்கு தீர்வொன்றைக்காண முனையாது, அதனை உக்கிரப்படுத்தும் வரவு செலவுத் திட்டத்தையும் உருவாக்குவார்கள். இவர்களைப் போன்றே பாராளுமன்ற தமிழ்க்கட்சிகளும் கூட யுத்தத்தால் ஏற்படும் அனர்த்தங்களைப் பற்றி வாய்கிழியக் கத்துவார்களே தவிர, அவர்களின் செயற்பாடுகளானது யுத்தத்தை ஆதரிப்பதாகவே உள்ளது.

எனவே எவரும் நாளாந்தப் பிரச்சினையில் தமிழ்க்கட்சிகள் மூழ்கிப் போகாமல், அமைதியை சமாதானத்தை கௌரவமான தீர்வை எட்டுவதற்கும் அவை முயற்சிக்க வேண்டும்.

செவிகளில் விழுந்த குரல்கள்.

காலம் கடந்த ஞானம்

மேஜ.ஆர். ஜயவர்த்தனாவுக்கும், ராஜீவ் காந்திக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட இன நெருக்கடித் தீர்வுக்கான அரசியல் உடன்படிக்கை சீர்குலைக்கப் படாமலிருந்திருந்தால் இன்று இன நெருக்கடி என்ற ஒன்று இருக்கவே முடியாது. அரசியல் சுய நலமுடையோர் மக்களைத் தூண்டி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தியதுடன் இந்தியப் பிரதமரையும் தாக்கி விவகாரத்தைச் சீர்குலைத்தனர். இன்று அவர்களே மேஜ.ஆர். ராஜீவ் ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்தலாம் என்று சொல்கிறார்கள். இது காலம் கடந்த ஞானமாகும்.

பாத்ததும்புரவில் ரணில் விக்கிரமசிங்க.

ஜெனரலின் ஆதங்கம்

குடாநாட்டிற்கு பாதுகாப்பான கப்பல், அல்லது விமான மார்க்கப்பாதை ஏற்படுத்தவில்லையே என்று அரசாங்கத்தைக் குறை கூறுபவர்கள் இந்தப் பயணங்களில் தடங்கலை ஏற்படுத்தும் புலிகளின் செயற்பாட்டைக் கண்டிப்பதாக இல்லை.

குடாநாட்டிற்கான இராணுவத்தளபதி
மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல கருத்து.

வியப்பில்லை

கூறப்பட்ட வாக்குறுதிகளை அரசியல்வாதிகள் காப்பாற்றத் தவறியதால் கோபமுற்ற தமிழ் மக்கள் பகைமை பாராட்டுவதில் வியப்பில்லை. இதன் காரணமாகவே தமிழ் இளைஞர்கள் போரில் குதித்தனர். தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் பல மீறப்பட்டுள்ளன.

பியமன பிரதேச சபைத்தலைவர்
என்.எல். குணசிறி ஜயநாத் கூற்று.

வேண்டுகோள்

குறுகிய அரசியல் லாபங்களைக் கைவிட்டு அன்பு, மனித நேயம், அகிம்சை போன்றவற்றை முன் வைத்து அனைவரும் செயற்பட வேண்டும். இளைய தலைமுறையினராகிய நாங்கள் இனியும் வன்முறை காரணமாக மனித உயிர்கள் அழிவதையும், அழிக்கப்படுவதையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

மட்டக்களப்பு வை.எம்.சி.ஏயும்
சமூக-சமய நடுநிலையமும் கூட்டாக தெரிவிப்பு.

தீர்மானம்

எம் மக்கள் மீண்டும் தம் சொந்த மண்ணுக்குத் திரும்பி தன்மானமுள்ள மக்களாக வாழ்வதற்குரிய உரிமையை உத்தரவாதப் படுத்த வேண்டும்.

வடக்கு முஸ்லிம்கள் உரிமைக்கான
அமைப்பு தீர்மானம்.

கவலை

வடக்கு, கிழக்கில் சுமார் 15,000 இளம் விதவைகளும், 20,000க்கும் அதிகமான அநாதைகளும் இருப்பதோடு சுமார் 27,000பேர் காணாமற் போயுமுள்ளனர். கடந்த பதின்மூன்று வருடகாலத்தில் இவை இடம்பெற்றுள்ளது.

பாராளுமன்றத்தில் மேஜாசப் பராராசசிங்கம் தெரிவிப்பு.

உண்மை நிலை இதுதான்

உணவு வழங்கல் இன்று அரசியலுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கின்றது. இது மிகவும் துரதிஷ்டமானதொரு நிலமையாகும். ஆனால் உண்மை நிலை இது தான் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

உலக உணவு நிகழ்ச்சித்திட்ட வைபவத்தில்
லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு.

யுத்தத்தின் எதிரொலி

(திருகோணமலை மாவட்டத்தில் மட்டும்)

திருகோணமலை மாவட்டத்தில் 87000 பேர் வாழ்ந்தனர். இங்கு 647கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. இவற்றில் 102 மீனவக் கிராமங்கள். புல்மோட்டையிலிருந்து வெருகல் வரையான பகுதிகள் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவையாகும். தமிழர்களே பெரும்பான்மையாகவுள்ள போதும் சனத்தொகையில் கணிசமானளவு சிங்களவர்களும், முஸ்லிம்களும் வாழ்கின்றனர். இங்கு 1990ம் ஆண்டில் 58711 குடும்பங்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ளன. 59,052 குடும்பங்கள் வீடுகளை இழந்துள்ளன. 1993ம் ஆண்டில் மட்டும் 1769பேர் உயிரிழந்தனர். இப்போதும் 4840குடும்பங்கள் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்கின்றனர். இவர்களில் 3360 குடும்பங்கள் அகதி முகாம்களில் தங்கியுள்ளனர். 15053 குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் தற்போதைய இருப்பிடம் தெரியாமலுள்ளது. 127இந்துக்கோவில்கள் 47விகாரைகள், 57பள்ளிவாசல்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. 27நலன்புரி நிலையங்கள் தொழிற்படுகின்றன. 6சிறுவர் இல்லங்கள் இயங்குகின்றன. சுமார் 6000பேர் விதவைகளாகியுள்ளனர். 1800க்கும் மேற்பட்ட சிறுவர்கள் அநாதைகளாகியுள்ளனர். இவர்களில் 500க்கும் மேற்பட்ட சிறுவர்கள் அதிகமானவர்கள் பெற்றோர் இருவரையும் இழந்தவர்களாவர்.

நன்றி; விபவி செய்தி மடல்

எமக்கு இல்லை

புலிகளுடன் சண்டையிடவே நாங்கள் இருக்கிறோம். பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அனுமதி வழங்கும் பொறுப்பு எமக்கு இல்லை.

முஸ்லிம் விவசாயிகளுக்கு மத்தியில்
மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தெரிவிப்பு.

பாராட்டு

அரசியல் வாதிகள் என்ற வகையில் நாம் ஈட்டியுள்ள பெயரையும், புகழையும் விட நம் நாட்டு கிரிக்கட் வீரர்கள் விளையாட்டுத்துறை மூலம் கூடுதலான கௌரவத்தை பெற்றுத் தந்துள்ளனர்.

ஜனாதிபதி பாராட்டு.

முன்னாள் ஆளுநரின் வாக்குமூலம்

வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்திப் பணிகளுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் பணமோ, அல்லது புனர்வாழ்வு புனரமைப்புப்பணிகளுக்காக ஒதுக்கப்படும் பணமோ, முறையாக வந்து சேர்வதில்லை. ஆகவே இப்பிரதேசங்களில் எத்தகைய அபிவிருத்திப் பணிகளையும் நடைமுறைப்படுத்த முடியாமலிருக்கிறது.

பி.பி.சிக்கான பேட்டியில்
முன்னாள் ஆளுநர் காமினி பொன்சேகா.

அர்த்தமற்ற யுத்தம்

இந்த நாடு சிங்களவர்களுடைய நாடுதான் என்ற சிந்தனை இருக்கும் வரை நாட்டில் அமைதியும், சமாதானமும் வெகு தூரத்திலேயே இருக்கும். தீர்வுத்திட்டத்தினால் மட்டும் உதடுகளில் புன்னகையை மலரவைக்கவும் முடியாது. இந்த நாட்டில் வாழும் சகல இன மக்களினதும் உள்ளங்களுக்கிடையே ஒற்றுமை மலரவேண்டும்.

தமிழ் பேசும் மக்களுடன் தமிழில் பேசக்கூடியதாக பெரும் பான்மை சமூகம் மாறாதவரை, நான்கு ஐந்து தமிழ் வார்த்தைகளை அரசியல் தலைவர்கள் படிக்காத வரை, இந்த நாட்டின் இன்றைய நோய் தீர மாட்டாது. இதனால் தான் அர்த்தமற்ற யுத்தம் இந்த நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது.

அக்கரைப்பற்று மீலாத் விழாவில்
அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் உரை.

பயன்கிடைக்கவில்லை

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் எல்லைப்பகுதியிலுள்ள செவுளியாமடு கிராமத்திலிருந்து 1985ம் ஆண்டு இடம்பெயர்ந்த 105 தமிழ்க் குடும்பங்கள் 14 ஆண்டுகளாக அகதி முகாம்களிலேயே வாழ்கிறார்கள். அயல் கிராமங்களைச் சேர்ந்த பெரும்பான்மை இன மக்கள் அத்துமீறிக் குடியேறியுள்ளனர். அவ்வப்போது ஜனாதிபதிகளாக இருந்து அனைவருக்கும் மகஜர்கள் அனுப்பியும் இதுவரையும் பயன்கிட்டவில்லை.

ஆணைக்குழு முன்னிலையில்
காந்தி சேவா சங்கப் பொதுச்செயலாளர்
கதிர் பாரதிதாசன் தெரிவிப்பு.

தேர்தலுக்கு முன்னுரிமை

உண்மை நிலமை என்னவெனில் இரு பிரதான அரசியல் கட்சிகளும் இனப்பிரச்சினைக்கான தீர்வை தங்கள் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பின் தள்ளிவிட்டு, தேர்தலுக்கான ஏற்பாடுகளுக்கே முன்னுரிமை கொடுத்தவர்களாகவே காணப்படுகின்றன.

ஜெகான் பெரேரா

தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதிய கண்ணோட்டம் வரவேற்கிறது.

அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

புதிய கண்ணோட்டம்
த.பெ.இல: 442
கொழும்பு

E.P.I.C., Box No: 95,
95144, GargesLes,
Gonnesse Cedex,
France.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

Post Bag: 1041,
Madras-17,
India.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

P.Fach: 66,
59514 Welver,
Germany.

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

310, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021-2022

பள்ளிமுனை வீதி,
உப்புக்குளம்.
மன்னார்.
☎ 023-2370

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-22398

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-22724

மின் அஞ்சல் முகவரிகள் (E-mail Address):

epic-sl@slt.lk - Colombo
csorg@slt.lk - Jaffna
epiclondon@gn.apc.org - London
editor@epicnews.com - Canada
epic-g@t-online.de - Germany

Web site Address : http://www.epicnews.com

இனிய தமிழ் மக்களே!...

அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

யாழ்ப்பாணத்தில் புலிகள் விநி யோகித்து வரும் துண் டுப்பிரசுரத்தில், தாம் இன்னும் தனிநாட்டுக்காகப் போராடுவ தாகவும், ஏனைய இயக்கங்கள் அரசுடன் இணைந்து விடுதலை க்கெதிராக செயற்பட்டு வருகி ன்றார்கள் என்றும், எனவே இவ்விடுதலைப் போராட்ட வழி யில் தென்படும் இக்களைகள் யாவும் அகற்றப்படவேண்டும் எனவும், கூறியுள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழத்துக்காக போராடுவ தாக கூறிக்கொள்ளலாம். ஆ னால் அது உண்மையா என் பதையும், தொடரும் யுத்தம் தே வைதானா என்பதையும் தமிழ் மக்கள் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைக்கு தயார் என்று கூறு வதும், மூன்றாம் தரப்பு மத்திய ஸ்தம் இருந்தால் பேசுவோம் எ ன்பதும் தமிழீழம் தொடர்பான பேச்சுவார்த்தையா? அல்லது ஒன்றுபட்ட இலங்கைகுள் தமிழ ர்களுக்கு சுயாட்சிகிடைப்பதற் கான பேச்சுவார்த்தையா? என் பதை தமிழீழ விடுதலைப்புலிக ள் தான் தெளிவுபடுத்த வேண் டும்.

அது ஒரு புறமிருக்க நடை பெறும் யுத்தம் மக்களுக்காகத் தான் நடைபெறுகின்றதா? என் பதையும் நீங்கள் சிந்திக்க வேண் டும்.

ஒரு பக்கத்தில் போக்குவரத் துகள் இல்லை, மின்சாரம் இல் லை, மக்களுக்குத் தேவையான உணவுப்பொருட்கள் இல்லை, பட்டதாரிகளுக்கு வேலை இல் லை. இவையெல்லாம் இல்லை என்னும் போது நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்? இத்தமிழ்க் கட்சிகள் எல்லாம் என்ன செய் கின்றன? கப்பல் ஒன்றை ஓட்ட முடியாது, மின்சாரத்தைப் பெற் றுத்தரமுடியாது இவர்களுக்கே ன் பாராளுமன்றம்–இவர்களுக் கேன் பிரதேச சபைகள் என்கி றீர்கள்.

ஆனால் இப்பிரச்சினைகளு க்கான காரணகர்த்தாக்களான விடுதலைப்புலிகளிடம் இது தொடர்பாக கேட்கின்றீர்களா என்றால், இல்லை.

ஜரிஸ்மோனா கப்பலை பிர யாணிகளுடன் கடத்திச் சென் று, லயன் எயர் விமானத்தை 48 தமிழ் பிரயாணிகளுடன் சுட்டு விழுத்தி, போக்குவரத்தை முற்று முழுதாக குழப்பியவர்கள் யார்? அதனைப் போன்றே 50க்கு மே ற்பட்ட மின்மாற்றிகளை மட்டக் களப்பு மாவட்டத்தில் தகர்த்து மின்சாரத்தை நிறுத்தியவர்கள் யார்? வன்னிக்குச் செல்லும் உ ணவுப் பொருட்களில் பெரும் ப குதியை தமது தேவைகளுக்காக கொள்ளையடிப்பவர் யார்?

இப்படியான நடவடிக்கைகள் பிழையென நீங்கள் யாராவது கூறுகின்றீர்களா? இவையெல் லாம் பிழைதான். ஆனால் அத னை எப்படி கூறுவது? நாளை க்கு எங்களை உயிர் வாழ விட மாட்டார்களே என்று நீங்கள் கூறக்கூடும். உங்கள் பக்கக் கார ணம் சரியாகவும் இருக்கலாம்.

ஆனால் விடுதலைக்காக நீங்கள் என்ன கஸ்ரத்தையும் ஏற் கத் தயாராக இருப்பதாகத்தானே புலிகள் பிரச்சாரம் செய்கின் றார்கள். அது மாத்திரமல்ல, உங்களது மௌனமானது தமது செயற்பாடுகளுக்கான அங்கீகா ரமாகத்தானே அவர்கள் கருது கின்றார்கள்.

ஆனால் மீண்டும் இவற்றை இயங்க வைக்கும் படி தமிழ் கட்சிகளைத்தானே வற்புறுத்து கின்றீர்கள். இதனால் என்ன நடைபெறுகின்றது? உரிமைகள் பற்றி பேச வேண்டிய தமிழ்க்கட் சிகள் எல்லாவற்றையும் அன்றா டப் பிரச்சினைகள் பற்றியே பேச வைத்துள்ளீர்கள்.

எனவே பிரயாணிகள் விமா னத்தை சுட்டு வீழ்த்துவது, பிர யாணிகள் கப்பலைக் கடத்து வதும், மக்களுக்கான பொருட் களைக் கொள்ளையிடுவதும் தான் மக்களுக்கான அல்லது விடுதலைக்கான யுத்தமா என்ப தை நீங்கள் தீர்மானித்துக்கொள் ளவேண்டும்.

சுதந்திரத்திற்காகவும், விடு தலைக்காவும், தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்க வேண்டியவர்கள் இன்று மின்சாரத்திற்காகவும், போக்குவரத்திற்காகவும், உணவு க்காகவும் குரல்கொடுக்க வேண் டிய சூழ்நிலை. இதற்கு யார் கா ரணமென்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

வன்னியில் புலிகளும் கூட மக்களை விடுதலைக்காகப் போ ராட அணிதிரட்டவில்லை. வன் னிக்கு சாப்பாடில்லை என்பதை உலகுக்கு காட்டவே 40நாட்கள் வன்னியில் ஆர்ப்பாட்டம் செய் தார்கள்.

மக்களுக்கு செல்லும் உண வுப் பொருட்களில் ஒரு பகுதியை யும் எரிபொருளில் ஒருபகுதியை யும் தாம் எடுத்த பின் மக்களுக் கு உணவில்லை என போராட் டம் நடாத்துவது சிரிப்புக்குரிய தாக இல்லையா?

எனவே இவ்வளவு அடாவடி த்தனங்களும் நடைபெறும் போ தும், இவற்றை நிறுத்த முயற்சிக் காமல் போக்குவரத்து, மின்சா ரம், உணவு வகைகளை மக்களு க்கு கொடுக்க வேண்டியது அர சின் கடமை அவர்கள் அதனை ச் செய்யாமல் தமிழ் மக்களைத் துன்புறுத்துகிறார்கள் எனக் கூறி க்கொள்வதில் ஏதாவது அர்த்தம் உண்டா என் பதை தயவு செய்து சிந் தித்துப்பாருங்கள்.

புலிகளின் பொய்க ள், பித்தலாட்டங்கள், அடாவடித்தனங்கள், அராஜகங்களைப் பற்றி எழுதினால், உடனடி யாகவே அவனை அர ச ஆதரவாளனாகவும், தமிழ் இன விரோதியா கவும் சித்தரிக்கும் பத்தி ரிகைகளும், தமிழ் பிர முகர்களும் இன்னும் எம் மத்தியில் இருக்கத் தான் செய்கின்றார்கள்.

ஆனால் உண்மைக ளை நாம் புரிந்து கொ ண்டு செயற்படாவிட்டா ல் தமிழ் மக்களுக்கு வெறும் அழிவுதான் மிஞ்சும்.



இயக்க ஒற்றுமையை குழி தோண்டிப்புதைத்து, ஏனைய இயக்க உறுப்பினர்களை சுட்டுக் குவித்தவர்களுக்கு, அவ்வியக்கங் கள் இன்னும் உயிர்வாழ்வது கச ப்பாக இருக்கும்.

ஆனால் தம்மைத்தவிர வேறு யாரும் போரிடக்கூடாது, தம்மை த் தவிரவேறு யாரும் அரசியல் பேசக்கூடாது என்பவர்களால், எவ்வாறு ஒரு தனிநாட்டைப் பெ ற்றுக்கொள்ள முடியும் என்ப தை தயவு செய்து சிந்தித்துப்பா ருங்கள்.

அரசின் அடக்கு முறைகளு க்கெதிராக இணைந்து போராட வேண்டியவர்கள், இன்று திக்கு திக்காய் நிற்பதற்கு யார் காரண ம்? இந்த இறுதி நிமிடத்தில் கூட அரசு மீது அழுத்தங்களை உரு வாக்க வேண்டுமெனில் முத லில் எமக்குள் குறைந்த பட்ச ஐக்கிய மாவது வேண்டும் எனச் சிந்திக் காதவர்களால் எவ்வாறு தனி நாட்டைப்பெற்றுக்கொள்ள முடியும்.

தமிழினத்தை அழிக்க வேண் டும் அவர்களது வாழ்விடங்க ளை சீரழிக்க வேண்டும், என்ற இலக்கில் அரசு கவனமாக உள் ளது

ஆனால் குறைந்த பட்சம் எமது மக்களைக் காப்பற்ற வே ண்டும், எமது வாழ்விடங்களைக் காப்பாற்ற வேண்டும், தமிழ் மக் கள் தம்மைத் தாமே ஆளக்கூடி ய ஓர் சுயாட்சியை உருவாக்க வேண்டும் என்பதில் கூட ஒற்று மைப்பட முடியாமல், புலிகளை த் தவிர மற்றெல்லோரும் கொ ன்றொழிக்கப்பட வேண்டும் என் பவர்களால் எவ்வாறு தனிநாட் டைப் பெற்றுக் கொள்ள முடி யும்.

சிங்கள இனவாதிகளுக்கு சமனாக தமிழ் இனவாதத்தை தூண்டவேண்டும் என்கிற குமா ர் பொன்னம்பலம் போன்றவர் களும், தமிழரின் வீரம், தமிழ ரின் புத்தி சாலித்தனம் போன்ற சபைக்குதவாத வேதாந்தம் பேசு பவர்களுமே இன்னும் யுத்தத்தை ஆதரிக்கின்றார்கள். இதனால் அழித் தொழிந்து போவது தமிழ் மக்கள்தான்.

எனவே அன்பிற்கினிய தமிழ்மக்களே!

இவ்வளவு நாளும் கண்மூடி இருந்ததும், மௌனமாய் இருந்த தும் போதும், இனியாவது விழித் துக்கொள்ளுங்கள். யதார்த்த சூ ழலைப் புரிந்துகொள்ளுங்கள். இதன் மூலம் மாத்திரமே நாம் எமது குறைந்த பட்ச உரிமை களை வென்றெடுக்க முடியும்.

உங்கள்
சுரேஷ்

உரிமைகள் பற்றி பேச வேண்டிய தமிழ்க்கட்சிகள் எல்லாவற்றையும் அன்றாடப் பிரச்சினைகள் பற்றியே பேச வைத்துள்ளீர்கள். எனவே பிரயாணிகள் விமானத்தை சுட்டு வீழ்த்துவது, பிரயாணிகள் கப்பலைக்கடத்துவதும், மக்களுக்கான பொருட்களைக் கொள்ளையிடுவதும் தான் மக்களுக்கான அல்லது விடுதலைக்கான யுத்தமா என்பதை நீங்கள் தீர்மானித்துக்கொள்ளவேண்டும்.

மூடப்பட்டுள்ள பாதை; போக்குவரத்தில்லாமல் மக்கள் அவதி.

"தங்கையை வைத்தியசா லையில் சேர்த்துள்ளோ ம். ஆபத்தான நிலையி ல் உள்ளார். உடன் வரவும்"

கொழும்பிலிருந்து கிடைத்த அவசரச் செய்தியை யடுத்து கட ந்த செம்டம்பர் மாத நடுப்பகுதி யில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டேன். எனது இரு குழந் தைகளுடன் விமானம் மூலமா க வந்து தங்கையின் ஆபத்தான நிலையில் உதவினேன். எனி னும் இப்போது திரும்பிப் போக வழியின்றி ஏங்குகின்றேன். இவ் வாறு தெரிவிக்கின்றார் சரஸ் வதி என்பவர்.

யாழ்ப்பாணத்தின் தென்மரா ட்சிப் பகுதியைச் சேர்ந்த இவர் திரும்பிச் செல்வதை உறுதிப்படு த்த மீள் பயணச்சீட்டும் பெற்றிரு ந்தாராம். செம்டம்பர் 29ம் திகதி விமானம் சுடப்பட்டு விழுந்ததை த் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர் களில் இவரும், ஒருவர். கவலை யும், கம்பலையுமாக வாழும் இவர் நிமிடங்கள் ஒவ்வொன்றும் யுகங்களாய் நீள என்ன செய் வது? எப்படித் திரும்பிப் போய் சேருவது என்பது புரியாமல் தவிப்பதாகக் குறிப்பிடுகின்றார்.

யாழ்ப்பாணம்–கொழும்பு விமான போக்குவரத்தைத் தடுத் து நிறுத்தியவர்களுக்கு இத்தகை யவர்களின் கண்ணீர்க் கதைகள் தெரிந்திருக்குமோ? என்ன வோ? யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வருவதோ, அல்லது கொழும்பிலிருந்து யாழ்ப்பாண ம் செல்வதோ, ஆடம்பரச்சுற்று லா அல்ல. பெரும் பொருட் செ லவு ஒருபுறம் உடல்உள அலை ச்சல்கள் மறுபுறம்.

ஆனால் இப்போதோ எப்படி அலைந்தாலும் பயணம் கை கூடுவதாக இல்லை. மக்களுக் கான சேவைகளை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு என் பது எவராலும் மறுக்கப்பட முடி யாதது. அத்தகைய சேவைகளில் போக்குவரத்துச் சேவை மிகவும் முக்கிய மானது. எனவே யாழ்ப்பா ணக்குடா நாட்டிற்கு தரைவழி யாகவோ, கடல்மார் க்கமாக வோ,வா ன் வ ழி யிலோ சீ ரானசுமு கமான போக் குவரத்து ஏற்பாட் டைத்தொ டர்ந்துபே ணு வ து மூலமாக வே குடாநாட்டில் வாழும் மக்க ளுக்கு நம்பிக்கை யூட்டமுடியும் என்பது புரிந்து கொள்ளப்பட் டாக வேண்டும்.

அதேவேளை பயணிகள் போ க்குவரத்தைச் சீர்குலைக்கும் செ யற்பாடுகள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும். போராட்டம் என்பதன் பேரால் பயணிகள் போக்குவரத்துக்குக் குந்தகம் ஏற்படுத்தும் செயற்பா டுகள் மக்களின் நாளாந்த வாழ் க்கையோடு நடத்தும் கொடுமை யான விளையாட்டு.

பயணிகள் விமானமும், கப் பலும், மின்சார கோபுரங்களும், இராணுவ இலக்குகளாக கருதப் பட்டுத் தாக்கப்படுவதால் மக்க ளின் நாளாந்த வாழ்வு அவல நிலைக்கு உள்ளாக்கப்படுவது கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இத்தகையவற்றை இராணுவ இலக்குகளாக கருதப்படுவதை கண்டிக்காத சக்திகள் அரசாங் கம் மக்களுக்கான சேவைகளை வழங்கப் பின்னடிப்பதாகக் குற்ற ம் சாட்டு வது சற்று ம் பொரு த்த மான தாக இரு க்காது. இ தனையே யாழ்ப்பா ண குடா நா ட்டிற் கானஇரா ணுவ தள பதியாகப் பணியாற்றி யவரான மே ஜ ர் ஜெனரல் ல ய ன ல் ப ல க ல் ல வும் ஒரு பேட்டியி ல்சுட்டிக் காட்டியுள்ளார்.

அதாவது குடாநாட்டிற்குபாது காப்பான போக்குவரத்து இல் லையே என்று அரசாங்கத்தைக் குறை கூறுபவர்கள் இந்தப் பய ணங்களில் தடங்கலை ஏற்ப டுத்தும் புலிகளின் செயற் பாடு களையும் கண்டிக்க முன் வர வேண்டும் என்பது மேஜர் ஜெ னரல் லயனல் பலகல்லவின் ஆதங்கம். அது பொருத்தமான து தான்.

ஆனால், கிளாலிக் கடனீரே ரிக்கு ஊடான போக்குவரத்தி ற்கு தடைவிதித்து இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்ட போதும் புலிகள் அவற்றை மீறி போக்குவரத்தை தொடர்ந் தும் நடத்தி வந்தனர் என்பதை நினைவூட்டிய யாழ்ப்பாண வர்த் தகர் ஒருவர் மேலும் கூறுகையி ல், கிளாலிக் கடற்பரப்பில் வள் ளங்கள் தாக்கப்பட்ட போதும், பலர் உயிரிழந்த போதும், பயண ங்கள் சில சமயம் தாமதப்பட்டா லும் தடைப்பட்டதாக இல்லை. என்றார் அவர்.

ஒரு விமானம் விழுந்தவுடன் அல்லது விழுத்தப்பட்டதுடன் முழு விமானச் சேவையும் சீர் குலைந்து போகுமாயின் எப்படி அரசாங்கத்தின் செயற்பாடுகளி ல் நம்பிக்கை கொள்ள முடியும் என்கிறார்.

அவரது கேள்வியின் நியாயம் புரிந்து கொள்ளப்படக்கூடியதே, நாட்டின் ஒரு பகுதிக்குச் சென் று வருவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதே பொருத்தமான தில்லை என்ற கருத்து நிலவிய து போய் இப்போது போக்குவரத் தே இல்லை என்ற நிலை வந்து விட்டது. இது யாழ்ப்பாணக் குடாநாடு துண்டிக்கப்பட்டுள்ள து என்ற நிலைமையையே மக் கள் மனங்களில் ஏற்படுத்துவதா க உள்ளது எனலாம்.

தொடர்ச்சி 11ம் பக்கம் ☞

இராணுவ இலக்குகளாக மின் மாற்றிகள் இருட்டில் தடுமாறுது கிழக்கு,

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மற்றும் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த அக்டோபர் 10ம் திகதி முதல் ஹபரணையூடான மின் விநியோகமும், அக்டோபர் 11ம் திகதி முதல் இங்கினியாகல ஊடான மின்விநியோகமும் துண்டிக்கப்பட்டன.

அக்டோபர் 18ம் திகதியன்று வந்தாறு மூலைக்கு அருகே மின் கோபுரங்கள் தகர்க்கப்பட்டன. அத்துடன் மின் விநியோகத்துக்கான கோபுரங்களுக்கு அருகே புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளால் சிலர் காயமடைந்தனர். இந்தச் செயற்பாடுகளை அடுத்து மட்டக்களப்பு மாவட்டம் ஏறத்தாழ இருளில் மூழ்கிப்போயுள்ளது.

கடந்த சில வருடங்களாகவே மின்சார விநியோகத்தைச் சீர்குலைக்கும் வகையிலான முயற்சிகளில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டிருந்தனர் என்பது வெளிப்படை.

மின் மாற்றிகளையும், மின் சார விநியோகக் கோபுரங்களையும் இராணுவ இலக்குகள் போல விடுதலைப்புலிகள் கருதுன்றனர் போலும். படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு மின்விநியோகம் மேற்கொள்ளப்படுவது ஒரு பாரபட்சமான நடவடிக்கை.

அதனாலேயே மின் விநியோகம் சீர்குலைவுக்கு உள்ளாகின்றது என்ற எடுகோளின் அடிப்படையில் சமரசம் காணச் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

விடுதலைப்புலிகள் பெருமளவுக்கு காணப்படும் படுவான்கரைப்பகுதிக்கும் மின்விநியோகத்தை ஏற்படுத்துவதன் மூலமாக இந்தச் சீர்குலைப்பு நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. இந்த வகையில் பிரதி அமைச்சரும், முஸ்லீம் காங்கிரஸ் பிரமுகருமான எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லா சில நடவடிக்கைகளை மேற்கொண்டார்.



படுவான்கரைக்கு மின் விநியோகத்தை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தரப்பிலிருந்தும் பல்வேறு முட்டுக்கட்டைகள் போடப்பட்டது உண்மையே. அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்ட சில திட்டங்கள் கூட நடைமுறைக்கு வந்துவிடவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பாலான தமிழர்கள் வாழும் கிராமப்புறங்கள் மின் ஒளியைப் பெறக்கூடாது எனத் தடுக்கப்படுவது என்பது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதல்ல.

எனினும், விடுதலைப்புலிகள் பிராந்திய மட்டத்தவர்களுடன் இணக்கம் காண்பது மூலம் ஒரு சில அபிவிருத்திப்பணிகளை தடங்கலின்றி முன்னெடுத்துச் செல்ல முடியும் என்ற எண்ணம் பொருத்தமானதல்ல என்பதையே கிழக்கிற்கான மின் விநியோகச் சீர்குலைப்பு நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

மீண்டும் மீண்டும் மின் மாற்றிகளும், மின் கோபுரங்களும் தகர்க்கப்படும் நிலைமைக்கு அரசாங்கத்தை மட்டும் குறை கூற முடியாது. மின் விநியோகத் துண்டிப்பால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் கண்டு கொள்ளப்பட வேண்டும்.

இருட்டில் மூழ்கடிக்கப்படுவதால் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசம் என்ற மாயத்திரை கிழிக்கப்பட்டுள்ளது.படை முகாம்களுக்கு மிக அருகாமையிலுள்ள மின் கோபுரங்களைக் கூட வெட்டிச் சாய்க்கும் அளவுக்கு விடுதலைப்புலிகள் பலமாக உள்ளனர்.

மின்கோபுரங்களுக்கு அருகே மிதிவெடிகளைப் புதைக்கும் அளவுக்கு அவர்களால் நடமாடக்கூடியதாக உள்ளது.

இத்தகைய கருத்துக்களை முன்வைப்பவர்கள் சிலரும் உள்ளனர். இவர்கள் செய்யப்படும் நடவடிக்கைகள் சரியா?தவறா? என்பதற்குஅப் பால் விடுதலைப்புலிகளின்பலம் அல்லதுஆற்றல் உணர்ந்து கொள்ளப் படவேண்டும் என்றே கருகின்றனர்.

ஆனால் எந்த மக்களின் எதிர்கால நல வாழ்வுக்கு துப்பாக்கி ஏந்திப் போராடுவதாகச் சொல்லப்படுகிறதோஅந்த மக்கள் நிகழ் காலத்தில் இன்னல்களைஅனுபவிப்பதற்கு வழிவகுப்பதாகவே இத்தகையவை உள்ளன என்பது உணர்ந்து கொள்ளப்பட்டாக வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மின்சார விநியோகத்தைச் சீர்குலைப்பதால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்கள் பல. மின் விநியோகம் இல்லாமையால் அரிசி ஆலைகள் செயலிழந்துள்ளன.

இதனால் அரிசியின் விலை மிகவும் உயர்ந்துள்ளது. சாதாரண விலையிலிருந்து இரண்டு மடங்கு வரை இந்த விலை உயர்வு அவதானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வைத்தியசாலைக்கான மின்விநியோகம் இன்மையால் மூன்று குழந்தைகள் அநியாயமாக உயிரிழந்துள்ளன. வைத்தியசாலையில் அவசர சத்திர சிகிச்சைகள், குழந்தைகள் பராமரிப்பு, குளிரூட்டிகள் என்பன போன்றவற்றில் பெருமளவு பாதிப்புக்கள் ஏற்பட்டு உள்ளன.

மேலும் மின் இன்மையால் வாழைச்சேனை காகித ஆலை செயலிழந்து போயுள்ளது. இதனால் சுமார் எழுநூறு பேர் நாளாந்த வருவாயை இழந்துள்ளனர். அவர்களது குடும்பங்கள் செய்வதறியாது திகைத்துப் போய் நிற்கின்றன. இவைகள் எல்லாம் சாதாரண விடயங்களல்ல.

இத்தகைய பாதிப்புக்களைக் கண்டுகொள்ளாமல் பலத்தையும், ஆற்றலையும் வியந்து புளகாங்கிதம் கொள்வதால் எத்தகைய நன்மைகள் விளையக் கூடும்.

மேலும், மின் விநியோகத் துண்டிப்பால் படையினரின் செயற்பாடுகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுவதாக இல்லை. படை முகாம்கள் மின் பிறப்பாக்கிகளின் துணையுடன் எந்தத் தடங்கலுமின்றிச் செவ்வனே தொழிற்படுகின்றன.

பொருட்கள் எடுத்துச் செல்வதைத் தடைசெய்யும் படையினரின் நடத்தை எவ்வாறு விடுதலைப்புலிகளைப் பாதிப்பது இல்லையோ, அதேபோல மின் விநியோகத் துண்டிப்பும் படையினரைப் பாதிப்பதாக இல்லை.

இரண்டு நடவடிக்கையாலும் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்படுவது சாதாரண மக்கள் மட்டுமேயாகும்.

எனவேதான் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிரான போர் என்று சொல்லிக்கொண்டு மின்சார விநியோகக் கோபுரங்களையும், மின்மாற்றிகளையும் இன்னும் இது போன்றவற்றையும் இராணுவ இலக்குகளாகக்கருதும் போக்கு கைவிடப்பட்டாக வேண்டும்.

இத்தகைய சீர்குலைவுகள் மக்களுக்கான விடுதலையைப் பெற்றுத் தந்துவிடும் என்று கருதினால் இதனால் ஏற்படும் பாதிப்புக்களுக்காக எவரையும் நொந்து கொள்வது பொருத்தமானதாக இருக்காது. ●



தமிழீழத் தேசியத் தலைவருக்கோர் சிறிய மடல்,

மதிப்பு மிகு தமிழீழ தேசியத் தலைவருக்கு முதற்கண் எனது இனிய வணக்கங்கள். தமிழனின் வீரத்தை எட்டுத் திக்கும் பறைசாற்றிய தங்கள் ஆற்றலை தமிழனாகப் பிறந்தவன் எவனும் பாராட்டாமல் இருக்க முடியாது.

முல்லைத்தீவு இராணுவ முகாம், கிளிநொச்சி இராணுவ முகாம் தாக்குதல்கள் உலக வரலாற்றில் பதியப்படும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அரசியல் ரீதியான சில கருத்துக்களை உங்கள் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் என்பதற்காகவே இம் மடலை எழுத விரும்பினன்.

இராணுவ நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கே உங்களுக்கு நேரம் போதாமல் இருக்கும் பொழுது, அரசியல் யதார்த்தங்கள் உங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றதா என்ற ஐயமே இம்மடலை எழுதத் தூண்டியது.

முதலாவதாக 35இலட்சம் மக்களுக்கு விடுதலை வேண்டியே நாம் இப்போராட்டத்தை ஆரம்பித்தோம். நாம் குறிப்பிடும் இம் 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களில் மலையகத் தமிழர், இஸ்லாம்யத் தமிழர் எல்லோரும் உள்ளடக்கம்.

ஆனால் மலையக மக்களோ, அல்லது இஸ்லாமிய மக்களோ, தமிழீழத்துக்கான தமது ஆதரவை என்றும் எமக்களித்ததில்லை. அவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளத் தவறியமை தமிழ் தலைமைகளில் ஏற்பட்ட தவறா என்பதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

நிற்க! இன்று நடைபெறும் தமிழீழத்துக்கான போராட்டமானது, மலைநாட்டு தமிழ் மக்கள், முஸ்லீம்கள் தவிர்ந்த வட-கிழக்கின் பூர்வீகத் தமிழ் மக்களின் வாழ்வுரிமையை நிலைநாட்டவே நடைபெறுகின்றது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்.

இவ்வட-கிழக்கு பூர்வீகத் தமிழ் மக்களின் தொகை 1981ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 16இலட்சம் மக்களை. இதில் ஏறத்தாழ 6லட்சம் மக்கள் ஐரோப்பிய, அமெரிக்கா நாடுகளில் குடியேறிவிட்டனர்.

இவர்கள் மீண்டும் தமது தாயகத்திற்கு திரும்புவார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. யுத்தம் தொடர்ந்து நடந்தால் சுலபமாக அரசியல் அடைக்கலம் கிடைத்துவிடும் என்றே பலர் நம்புகின்றனர். இதற்காகவே உங்கள் இயக்கத்திற்கும் தொடர்ந்து நிதி உதவி செய்கின்றனர் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

மிகுதியான 10இலட்சத்தில் ஏறத்தாழ 75,000 பேர் யுத்தத்தினால் மாத்திரம் மாண்டிருப்பார்கள். இயற்கை இறப்பு பிறப்பைக் கவனத்தில் கொண்டாலும், சனத்தொகை அதிகரிக்கவில்லை என்பதை புரிந்து கொள்ள முடியும். அரசாங்கமும் யுத்தத்தை நீடித்து இயன்றவரை தமிழ் மக்களை மூன்றாவது சிறுபான்மை இனமாக வைத்திருக்கவே விரும்புவதாகத் தோன்றுகின்றது. இச்சூழ்நிலையில் யுத்தம் நீடித்துச் செல்வதானது, தமிழ் இன அழிப்பிலேயே போய்முடியும் என நீங்கள் சிந்திக்க வில்லையா?

தமிழ் மக்களுக்கு ஒரே தீர்வு தமிழீழம் தான் என தனது இறுதிக் காலங்களில் தந்தை செல்வா கூறியிருந்தார். அதே தந்தை அவர்கள் தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பற்ற வேண்டும் எனவும் கூறியிருந்தார்.

அவரது இரண்டாவது கூற்று மிகவும் அர்த்தம் பொதிந்ததாகவே இன்றைய சூழ்நிலைகள் காணப்படுகின்றன. தந்தை செல்வாவின் தொகுதியான காங்கேசன்துறைத் தொகுதியானது அதி உயர் பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டு அங்கு மக்கள் சென்று மீளக்குடியமர முடியாத சூழ்நிலையே இன்று இருந்து வருகின்றது.

இராணுவம் ஒரு படி மேலே சென்று காங்கேசன்துறையில் மக்கள் மீளக்குடியமர்வதானது பாதுகாப்புக்கு குந்தகமானது எனவே அவர்களுக்கு வேறு இடத்தில் காணியும், நஷ்ட ஈடும் கொடுத்து, மக்களை நிரந்தரமாக இன்னொரு இடத்தில் குடியமர்த்தும்படி அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளது.

இதன் மூலம் சிங்கள இராணுவத்தை விட்டு ஓடுவோரின் எண்ணிக்கையையும் குறைக்கலாம் என திட்டமிடுகின்றனர். இதன் மூலம் யாழ்ப்பாணத்திலும் சிங்களவரைக் குடியேற்றுவது என்பதுடன், நீண்ட கால யுத்தத்துக்கு சிங்களப் படைகளும் தம்மை தயார் படுத்துகின்றன என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையையும் இடம் மாற்றும் படியும் இராணுவத்தினர் பரிந்துரை செய்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் பார்ப்போமாயின் தமிழனத்தை அழிப்பதென்ற கொள்கையின் அடிப்படையில் திட்டங்கள் வகுக்கப்படுவதை நாங்கள் புரிந்து கொள்ளலாம்.

1983ம் ஆண்டு மணல் ஆற்றில் குடியேறியோரையே அப்புறப்படுத்த முடியாத நிலையில், யாழ்ப்பாணத்தில் குடியேற்றங்களை அகற்றிவிட முடியும் என்பதல்ல.

திருகோணமலையிலும் தொடர்ந்து சிங்களக் குடியேற்றங்கள் நடந்த வண்ணமே உள்ளன. இந்நிலையில் யுத்தத்தை தொடர்வதானது தமிழ் இன அழிவுக்கும், சிங்களக் குடியேற்றத்துக்கும் வழி வகுத்து வருகின்றது என்பதாகவே தோன்றுகின்றது.

உங்களைப் பொறுத்த வரையில் உங்களுக்கு உங்கள் இராணுவ நடவடிக்கைகளில் அதீத நம்பிக்கை இருக்கலாம். அதைத் தவறென நான் கருதவில்லை. தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை என புலிப்படை விரிவடைந்திருக்கலாம்.

ஆனால் இன்றைய சூழலில் சிங்களப் படையை அழித்து ஓர் இராணுவ வெற்றி சாத்தியமானதுதானா என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அழிவுகளும் தொடர்ச்சியான யுத்தமும் மக்களை மிகவும் நொந்துடித்துள்ளது. இந்நாட்டைவிட்டு தப்பிப் போகவே ஒவ்வொரு தமிழனும் யோசிக்கின்றான்.

இந்நிலையில் தமிழீழம் கிடைத்தாலும் அங்கு வசிப்பதற்குத் தமிழன் இருப்பானா என்பதே பெரிய கேள்வியாக வருகின்றது. யாழ்ப்பாணத்தின் பல கிராமங்கள் வேரோடும் வேரடி மண்ணோடும் கனடாவிற்கும், லண்டனிற்குமென இடம் பெயர்ந்து விட்டன.

பல வீடுகளில், இன்றோ நாளையோ சாவை எதிர்பார்த்திருக்கும் வயது முதிர்ந்தோர் தான் வாழ்கின்றனர். இந்நிலையில் தொடரும் யுத்தம் தமிழ்மக்களுக்கு வாழ்வளிக்குமா என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எல்லோரும் ஒன்று பட்டு யுத்தத்தில் ஈடுபட்டால் சிங்கள இராணுவத்தை வென்று, தமிழீழத்தை ஸ்தாபித்து விட முடியும் என நீங்கள் கூறக்கூடும். விடுதலைப் போராட்டத்தில் இழப்புகள் சகஜமானதே எனவும் நீங்கள் கருதலாம்.

ஆனால் எல்லோரும் ஒன்றுபட்டு யுத்தம் புரிவதற்கான எந்தவொரு களமுமில்லை என்பதுதானே யதார்த்தமானது. ஏனைய இயக்கங்களையும் அவர்களது ஆதரவாளர்களையும் துரோகிகள் என முத்திரையிட்டு கொன்றொழிப்பது என்பதில் எவ்வித மாற்றமும் இல்லாத போது எல்லோரும் ஒன்று பட்டு போரிடல் என்ற விடயமே அடிபட்டுப் போய் விடுகின்றது.

எனவே தான் நீங்கள் தனித்து நின்று பாரிய இராணுவத் திட்டங்களை வகுத்தாலும், அதில் சில திட்டங்கள் வெற்றியைத் தந்தாலும், மொத்தமாக நோக்குமிடத்து அழிவுதானே மிஞ்சுகின்றது.

கட்டிய ஆடையும் கந்தலான நிலையில் நாங்கள். கவலை வேண்டாம், பட்டுவேட்டி தருகின்றேன் என நீங்கள் கூறலாம். ஆனால் கட்டியுள்ள கந்தலாடையும், களவு போய் விடுமா என்பதுதான் தமிழர் நிலை. சிந்திப்பீர்கள் என்று நம்புகின்றேன்.

ஆவரங்கால் சிவலிங்கம்.

யுத்தமும் இனப்பிரச்சினையும் அதிகாரத்துக்கு தேவையாகலாம்...?

ஆனால் எதிர்கால நலன் கருதுவோர் வாழா இருக்க முடியாது!

சந்திரிகா அரசு பதவிக்கு வந்து நான்கு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.ஆனால் இந்த அரசு பதவியேற்ற போது இந்த நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களிடம் இருந்த எதிர்பார்ப்புக்கள் நம்பிக்கைகள் எல்லாமே கானல் நீராகிவிட்டன.

முன்னெப்போதும் இல்லாத உக்கிரத்துடன் இந்த நாடு இரத்

தம் சிந்திக் கொண்டிருக்கிறது. சமாதானத்திற்கான முன்னெடுப்பாக புலிகளுடன் ஆரம்பித்த பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களின் எரியும் பிரச்சினைகளைத் தொடாமலே ஆறு மாதத்தில் முறிவடைந்துவிட்டது. தொடர்ந்து 1995 ஆகஸ்ட்டில் முன்வைக்கப்பட்ட யோசனைகள் இன்று தமிழ் மக்களைப் பொறுத்தவரை எந்த வித முக்கியத்துவமுற்ற விடயமாக மாறிவிட்டது.

அந்தளவுக்கு அது இந்த நான்கு வருடங்களில் சிதைக்கப்பட்டுள்ளது. போதாக்குறைக்கு ஜனாதிபதி அவர்கள் இன்றும் திருத்தங்களை முன்வைக்கலாம்; நாம் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம் என்கிறார். அது ஜனநாயகம் தான். தீர்வை மேலும் செழுமைப்படுத்தல் என்பது மேலும் உள்ளடக்கமற்றதாக்குவதாகவே நடைமுறையில் அமையும். உண்மையில் இந்தத் தீர்வுத் திட்டயோசனைகள் பற்றி இன்று அடக்கியே வாசிக்கப்படுகிறது.

பாராளுமன்றத்தெரிவுக்குழுவுடன் அது முடிவடைந்துவிட்டது. தமிழ்மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்று "தவளம" பிரச்சாரம் தென்பகுதி முழுவதும் முன்னெடுக்கப்பட்டது.

இந்தத் தீர்வுத் திட்ட யோசனைகள் முன்வைக்கப்பட்டது பற்றி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இந்த அரசு தீவிர பிரச்சாரத்தை மேற்கொண்டது.

ஆனால் ஜனநாயக வழிக்கு வந்த தமிழ்க்கட்சிகளுடன் பேசி தீர்வு யோசனைகளை அமுல்படுத்துவதற்கானஎண்ணம் குறைவாகவே இருந்தது.

இன்றும் கூட அந்த அக்கறை இல்லை. ஆறு வருடம் முடிய நாங்கள் தீர்வுத் திட்ட யோசனைகளை அமுல்படுத்தத் தான் முயன்றோம். ஆனால் ஐ.தே.க ஆதரவளிக்கவில்லை என்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ளப் போகிறார்கள்.

எனவே தீர்வுத்திட்ட யோசனைகள் உலகுக்குக் காட்டுவதற்கும், அடுத்த தேர்தல் பிரச்சாரத்திற்கும் அமுல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளாமலே பயன்படுமொன்றாகவே மாறிவிட்டது.

இன்று யுத்தத்திலீட்டும் வெற்றி தோல்விகளை அளவு கோலாகக் கொண்டே இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி அணுகும் போக்கு அரசிடம் காணப்படுகிறது.

அதற்கப்பால் இந்த நாடு பல இனமக்கள் வாழும் நாடு. இந்த நாட்டில் இனங்களின் சமத்துவம் உறுதிப்படு த்தப்படவேண்டும்என்பதில் அக்கறைகுறைவாகவே இருக்கிறது.

ஐ.தே.க ஆதரவளிக்காததால் தான் தீர்வுத்திட்டத்தை அமுல் படுத்துவதில் பிரச்சனை இருப்பதாக அரசு தொடர்ந்து கூறிவருகிறது. இலங்கையின் பேரினவாத கட்சிப் பாரம்பரியத்தில் ஒரு அரசு இனப்பிரச்சினை தீர்வுதொடர்பாக முன்வைக்கும் விடயம் எதிர் தரப்பினால் ஏற்றுக் கொள்ளப்படாதது இந்த நாட்டின் அரசியல் வரலாற்றின் தூரதிஸ்டம்.

ஆனால் இரத்தம் தோய்ந்த 17வருடத்தின்பின் பெரும் எதிர்பார்ப்புடன் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் பொது ஜன முன்னணியினருக்கு 1994 ஆகஸ்ட் தேர்தலிலும் தொடர்ந்து இரு மாதங்களின் பின் நடை பெற்ற ஜனாதிபதி தேர்தலிலும் ஆதரவளித்தார்கள்.

உண்மையில் இனப்பிரச்சினைத்தீர்வுக்கும், சமாதானத்துக்காகவுமே வாக்களித்தார்கள். பெருவாரியான மக்களின் அந்த ஆணை தொடர்பாக அரசு உறுதியாக இல்லை என்பது நான்கு ஆண்டுகளின் பின் மிகத் தெளிவாகவே தெரிகிறது.

இனப்பிரச்சினை தீர்வு, ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புதல் மனித உரிமைகளை நிலைநாட்டுதல் பற்றி ஜனாதிபதி தொடக்கம், அமைச்சர்கள், பா.உறுப்பினர்கள் வரை வாய்கிழியப் பேசியதெல்லாம் பிரச்சார நோக்கங்களுக்கானதே அன்றி வேறல்ல என்ற சந்தேகம் பலமாக எழவே செய்கிறது. இக்குற்றச் சாட்டை ஆதாரமற்று கண்மூடித்தனமாக இங்கு கூறவரவில்லை.

முதலாவதாக தெரிவுக்குழுவுக்கு ஐந்து தமிழ்க்கட்சிகள் கூட்டாக முன்வைத்த யோசனைகள் கருத்திற்கெடுக்கப்படவில்லை.

மறுபுறம் 1995ஆகஸ்ட்டில் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்ட யோசனைகளில் காணி அதிகாரம் மாநில அரசுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதாக இருந்தது. பின்னைய திருத்தங்களின் பிரகாரம் மாநில முதலமைச்சரின் ஆலோசனையுடன் எடுத்துக்கொள்ளலாம் என்றாகியது.

பிராந்தியங்களின் ஒன்றியம் என்றிருந்தது. பிரிக்க முடியாத பிராந்தியங்களின் ஒன்றியமாக மாற்றப்பட்டது.

தவிர வடகிழக்கு இணைப்பு பற்றி ஏற்கனவே இந்திய இலங்கை ஒப்பந்தத்திலுள்ள தற்காலிக இணைப்பு விடயமோ, தமிழ்க்கட்சிகளின் கோரிக்கையோ கருத்திற்கெடுக்கப்படவில்லை.

ஆனால் தமிழ்க்கட்சிகள் இந்தத் தீர்வுத் திட்ட யோசனைகளுக்கு ஆதரவு என்றே பிரச்சாரம் செய்யப்படுகிறது.

சரி இன்னோரன்ன குறைபாடுகளுடன் கூடிய தீர்வுத் திட்ட யோசனைகளை பாராளுமன்றத்தில் ஒரு பிரேரணையாக முன்வைத்து அமுல்படுத்த முற்பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறு முன்வைத்து ஐ.தே.க ஆதரவளிக்காத சூழ்நிலையில் அங்கு ஐ.தே.க தான் அம்பலப்பட்டிருக்கும். ஆனால் அதனைச் செய்ய அரசு முன்வரவில்லை.

சரி அதைத்தான் விடுவோம். ஜனாதிபதி அவர்களே கூறியிருக்கிறார். ஐ.தே.க ஆதரவளிக்காவிட்டால் தன்னிடம் தீர்வுத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு வேறு திட்டம் இருப்பதாக. ஆனால் அதுவும் இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை.

ஜே.ஆர். ஆல் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பகுதியினரின் ஆதரவில்லாமல் அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு இடமளிக்காததாகவே அமைந்துள்ளது. இந்தக் காரணத்தால் தான் ஜனாதிபதி முறையை மாற்ற முடியாத நிலைநிலவுகிறது என்றும் கூறப்படுகிறது.

ஜனாதிபதி முறை தொடர்பாக பலவிதமானஅபிப்பிராயங்கள் நிலவுவது உண்மைதான். இலங்கையின் பல இனமக்களதும் ஆதரவு இருந்தால்தான் ஒருவர் ஜனாதிபதியாக வரமுடியும் என்பது ஒருவிடயம். மறுபுறம் இவ்வாறு தெரிவு செய்யப்படுவர். ஆணைப் பெண்ணாகவோ பெண்ணை ஆணாகவோ மாற்ற முடியாதே தவிர மற்றெல்லாவற்றையும் செய்ய முடியும் என்று காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தான ஒருமுறை கூறியிருந்தார்.

வரம்பு கடந்த அதிகாரங்களைக்கொண்ட பதவி என்பதற்காகவே அவர் அவ்வாறு குறிப்பிட்டார்.

ஆனால் ஜனாதிபதிக்குள்ள அதிகாரம், மொத்த அரசுக்குள்ள அதிகாரம் அத்தனையும் பா

வித்தே யுத்தம் நடைபெறுகிறது. அவசரகாலச்சட்டம் அமுல்படுத்தப்படுகிறது. மர்மான கைதுகள், காணாமல் போதல் எல்லாமே நடைபெறுகிறது. இவையெல்லாம் யாருடனும் கலந்தாலோசித்தா மேற்கொள்ளபடுகின்றன.

ஐ.தே.க யுத்தத்தை நடத்திய போதும், 1983 இனவன்முறை, நூல் நிலையம் எரிந்தது உட்பட பல்வேறு அத்துமீறல்கள் நடைபெற்ற போதும் எதிர்க்கட்சியினரிடம் கலந்தாலோசித்தா மேற்கொண்டார்கள்.

இவற்றையெல்லம் சொந்த யோசனைகளின் பேரில் நடாத்தும் போது, இவற்றை மேற்கொள்ளும் போது விதிகளைப் பற்றிக் கவலைப்படாதவர்கள் இப்போது தீர்வு யோசனைகளை அமுல்படுத்துவதற்கு மாத்திரம் ஐ.தே.கட்சியின் ஆதரவு தேவை என்று கூறுவது நொண்டிச்சாட்டா அல்லது உண்மையா?

மாகாணசபைத் தேர்தல்கள் உரியகாலத்தில் நடத்தப்படவில்லை. இது ஒரு ஜனநாயக விரோத நடவடிக்கை என ஐ.தே.க வினர் உட்பட பலரும் ஆர்ப்பாட்டம் பண்ணுகிறார்கள். வடகிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்படாதது பற்றி இவர்கள் மூச்சுக்காட்டவில்லை.

சரி தங்களால் முடியாதென்றால் மூன்றாவது சக்தியொன்றின் உதவியுடன் பிரச்சினைகளைத்தீர்க்க முயல்வது தானே. அதுவும் இங்குமனப்படுவதாக இல்லை.

பிரிட்டனின் முன்னாள் வெளிவிவகாரப் பிரதி அடைச்சர் லியம் பொக்ஸ் இலங்கையின் ஆட்சி எதிர்க்கட்சி ஆகியவற்றுடன் இனப்பிரச்சினை தொடர்பாக செய்து கொண்ட உடன்படிக்கை தற்போதும் செல்லுபடியாகக் கூடியதே என்கிறார் பிரிட்டனின் தொழிற்கட்சி அரசின் பிரதியமைச்சர் "பட்லற்". ஏன் அ வருடைய வருகையுடன் அதனைப் புதுப்பித்திருக்கலாம். ஆனால் அதில் ஆர்வம் காட்டப்படவில்லை.

இதற்கிடையே பிரிட்டனைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் சில தமிழ் அரசியல் கட்சிகள் உட்பட பல்வேறு அமைப்புக்களுடன் தனது தரப்பு மத்தியஸ்தத்தின் சாத்தியம் பற்றிக் கலந்துரையாடல்களை நடாத்தின.

பலமேற்கத்திய ஸ்கன்டினேவிய, அவுஸ்திரேலியா ஆசிய நாடுகள் இதில் உதவிபுரியத் தயாராக இருப்பதாக அவர்கள் கூறினார்கள்.

வட அயர்லாந்தின் அனுபவம் எமது பிரச்சினையைத்தீர்ப்பதில் உதவலாம் என அவர்கள் நினைக்கிறார்கள். உண்மையில் வட அயர்லாந்துப் பிரச்சினையை விட இது பலவிடயங்களில் வேறுபட்டது.

பல்லாயிரக்கணக்கான மனித உயிரழிவுகளும், பலகோடிக் கனக்காண ரூபா சொத்தழிவையும் அனுபவத்தில் உடைய பிரச்சினை. எமது அரைநூற்றாண்டு கால ஏமாற்றம் இறுதியாகக் செய்து கொள்ளப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தம் அதனூடாக அமைக்கப்பட்ட மாகாணசபை கூட நிர்மூலம் செய்யப்பட்டது. வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்பட்டமை, பேசுபவர்கள் இடையே நேர்மை இன்மை, ஜனநாயக விரோதப்போக்கு, தமிழ்த் தலைமைத்துவங்களின் அறிவு இவை எல்லாம் எமது அனுபவங்கள்.

இவற்றையெல்லாம் கருத்திற்கெடுத்துச் செயற்படக்கூடிய மத்தியஸ்தரே தேவை.

இந்தியா எமது பிராந்தியத்திலுள்ள பாராம்பரிய, கலாச்சார, பொருளாதார உறவுகளைக் கொண்ட நாடு. இப்பிரச்சினை தீர்வு விடயத்தில் ஒரு காலகட்டத்தின் பங்காளியான இந்தியாவின் ஆதரவும் தேவை. இன்று நெல்சன் மண்டெலாவின் தென்னாபிரிக்கா, யசீர் அரபாத் உட்பட எல்லோரும் உதவத் தயாராகிருக்கிறார்கள்.

ஆனால் இங்குள்ள அதிகாரத்துவ அமைப்பில் ஒருபகு தியினருக்கு யுத்தமும், இனப்பிரச்சினையும் தொடர்ந்து தேவையாகி விட்டிருக்கிறது. இந்தப்பிரச்சினை தொடர்வது அவர்களுக்கு பணம் சம்பாதிப்பதற்கான வழியாகிவிட்டிருக்கிறது. அரசியல் வாதிகளில் ஒருபகுதியினருக்கு இதைச் சொல்லிக் கொண்டேஅரசியல் நடத்தும் வாய்ப்பும் இருக்கிறது.

ஆனால் யுத்தத்தை தொடர்ந்து நடத்த முடியுமா? 20 வருட யுத்தத்தில் ஏற்பட்ட உயிரழிவு எத்தகையது இன்னும் 5,10வருடங்களுக்கு யுத்தம் தொடரப்படுவதால் குறிப்பாக வடகிழக்கின் சமூக பொருளாதார கல்வி நடவடிக்கைகளில் ஏற்படக் கூடிய விளைவுகள் என்ன? எவ்வளவு மக்கள் மிஞ்சப்போகிறார்கள்? எத்தகைய பலவீனமான நிலமை ஏற்படப் போகிறது என்பது பற்றியெல்லாம்.

இவர்களுக்கு மாத்திரமல்ல வீரபராக்கிரமங்களில் புல்லரித்துப் போயிருப்பவர்களும் விழுந்தபக்கம் குறிசுடும் சமுகப் பொறுப் புணர்வற்ற தகவல் தொடர்புத்துறை சார்ந்தவர்களுக்கும் இது பிரச்சினை இல்லை.

ஆனால் சமூக அக்கறை கொண்ட எவரும் தற்போதைய நிலையை அவதானித்து வழா இருக்க முடியாது.

தமிழ்மக்களின் சுயமரியாதை கௌரவத்தை உறுதிப்படுத்தும் தீர்வை உருவாக்குவதில் உள்நாட்டில் சர்வதேச அளவில் தீவிரமாக வேலைசெய்தாக வேண்டும்.

எஸ்.திருநாவுக்கரசு

இன்று யுத்தத்திலீட்டும் வெற்றி தோல்விகளை அளவு கோலாகக் கொண்டே இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி அணுகும் போக்கு அரசிடம் காணப்படுகிறது. அதற்கப்பால் இந்த நாடு பல இனமக்கள் வாழும் நாடு. இந்த நாட்டில் இனங்களின் சமத்துவம் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பதில் அக்கறை குறைவாகவே இருக்கிறது.

கடமைகளை கண்டுகொள்ளாத பிரதிநிதிகளும் தலைவிதியை நோகும் மக்களும்.

செல்வா

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு போக்குவரத்து வசதியில்லை. கிழக்கு மாகாணத்திற்கு மின் விநியோகம் இல்லை. வன்னிப் பகுதிகளில் உணவுப் பொருட்களுக்கே தட்டுப்பாடு. இவை தமிழ் மக்கள் அனுபவித்து வரும் நெருக்கடிகளை எடுத்துக் காட்டக்கூடிய சில விடயங்கள்.

தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கை எத்தகைய துன்ப, துயரங்களுக்கு முகம் கொடுப்பதாக மாறியுள்ளது என்பதை எடுத்துக்காட்டக்கூடிய பல்வேறு விடயங்களைப் பட்டிலியலிட முடியும்.

எனினும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாகவும் கூறிக்கொள்பவர்கள் இந்த மக்களின் துன்ப துயரங்கள் குறித்து எத்தகைய அக்கறையைக் காண்பிக்கின்றனர் என்பது கேள்விக்குரியது.

படையினருக்கு எதிரான புலிகள் முன்னெடுக்கும் ஆயுத நடவடிக்கைகள், அவற்றை ஒடுக்க முனையும் அரசின் செயற்பாடு என்பவற்றிற்கு மத்தியில் நசுங்கிக் கொண்டிருக்கும் மக்களின் குரலை ஓங்கி ஒலித்து அரசியல் போக்கை நிர்ணயிக்க வேண்டிய சக்திகள் பலவீனமான பாத்திரங்களாகியிருப்பதே ஜனநாயக அரசியலின் காட்சியாகியுள்ளது.

ஆயுதம் ஏந்திய எதிர்ப்பியக்கத்தைக் கைவிட்டு ஜனநாயக அரசியலில் ஈடுபட்டு மக்கள் பிரதிநிதிகளாக அங்கீகாரம் பெற்றவர்களின் கையறுநிலை தான் தமிழ் மக்கள் இன்று சிந்தும் கண்ணீருக்கு அடிப்படை என எதிர்காலம் கூறக்கூடும். "அடிப்படைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு அன்றாடப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு" என்ற கோசம் கைகளிலுள்ள ஆயுதங்களைப் போல அர்த்தம் இழந்துபோயுள்ளது.

அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து பேச்சுக்களின் போது மௌனம் காத்தும், அன்றாடப் பிரச்சினைகள் விடயத்தில் வெற்று வாக்குறுதி வழங்கி இழுத்தடித்தும், செயற்படும் தமிழ்ப்பாராளுமன்ற பிரதிநிதிகளின் போக்கானது மொத்தத்தில் ஜனநாயக அரசியல் வழிமுறைகள் மீதே தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கச் செய்வதாகவுள்ளது.

தமிழ் மக்களைப் பெரிதும் பாதிக்கும் அவசரகாலச் சட்ட விவாதங்களின் போது கூட தமிழ்க் கட்சிகளின் நடத்தை வியப்புக்குரியது. இந்த விவாதங்களின் போது அனல் பறக்கப் பேசும் தமிழர் விடுதலைக்கூட்டணி வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் நழுவி விடுகிறது.

புளொட் அண்மைக் காலங்களில் எதிர்த்து வாக்களிக்கின்றது. பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் ஈ.பி.டி.பியினர் ஆதரித்து வாக்களிக்கும் போதும், அதற்கான காரணத்தைக்கூட தமிழ் மக்களுக்கு தெளிவு படுத்துவதாக இல்லை.

தற்போதைய பாராளுமன்றத்தில் ஈ.பி.டி.பி எனப்படும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு ஒன்பது ஆசனங்களும், புளொட் எனப்படும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினருக்கு இரண்டு ஆசனங்களும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஐந்து ஆசனங்களும், ரெலோ எனப்படும் தமிழீழ விடுதலை இயக்கத்திற்கு ஒரு ஆசனங்களும் உண்டு. அரசுக்கு எண்ணிக்கை அடிப்படையில் ஒரேயொரு பெரும்பான்மைப் பலம் மட்டுமே உண்டு.

இதன் மூலம் தமிழர் அரசியல் கட்சிகளுக்கு இருக்கக் கூடிய பேரம் பேசும் ஆற்றல் புலனாகும். பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சி வரிசையிலேயே அமர்ந்திருக்கும் போதும் அரசுக்கு நெருக்கடி கொடுக்கக்கூடிய பல விடயங்களிலும் அரசுக்கு ஆதரவாக வாக்களிப்பதையே இவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

கடந்த நான்கு ஆண்டுகாலத்திலும் தமிழ் மக்களின் பொது நலனைக் கருத்திற் கொள்ளும் வகையில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கக்கூடியபேரம் பேசும் வலுபயன் படுத்தப் பட்டிருக்கவில்லைஎன்பதுதான்சோகமானது.



பக்க வாத்தியக் காரர்கள்

இனப்பிரச்சினைக்கானதீர்வு குறித்து விடுதலைப்புலிகளுடன் மட்டுமே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என்ற கருத்து தமிழர் விடுதலைக்கூட்டணிக்குள் மேலோங்கியுள்ளது. அவர்கள் தான் முக்கிய பாத்திரங்கள் ஏனைய அனைவரும் பக்கப்பாட்டுக்காரர்களே என்பது மட்டக்களப்பு மாவட்ட பா.உ ஜோசப் பரராசசிங்கத்தின் முன்மொழிவு.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று சொல்லி அரசாங்கத்தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுப் பொதியின் சிற்பிகளுக்குள் ஒருவராக கூட்டணியின் தேசியப் பட்டியல் மூலம் தெரிவான பாராளுமன்றப் பிரதிநிதியான கலா நிதி நீலன் திருச்செல்வம் விளங்குகின்ற போதும் தனிநாடு என்பது எய்தப்படமுடியாத இலக்கு என்பதையோ, ஆயுதப் போராட்டத்தால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டு வரும் இழப்புக்கள் குறித்தோ தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழ் மக்களுக்கு எதையும் தெளிவுபடுத்துவதாக இல்லை.

பதிலுக்கு புலிகளின் ஆயுத பலத்தின் முன்பாக கூனிக்குறுகி மண்டியிட்டு நிற்கும் போக்கையே புலப்படுத்துகின்றனர். இதனால் தனிப்பட்ட ஒரு சிலரின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளலாம் எனவும் மனப்பால் குடிக்கின்றனர்.

இவ்வாறாக புலிகளின் செயற்பாடுகளுக்கு அரசியலரங்கில் நியாயம் தேட முற்பட்டிருக்கும் கூட்டணியினரைக் கூட அரசியல் எதிரிகளாகக் கருதும் போக்கே தளநிலமையாக உள்ளது.

மாநகர முதல்வர்கள் இருவர் படுகொலைகளுக்கு இலக்கானமையானது கூட்டணியின் அரசியல் இலக்குக்கு வைக்கப்பட்ட குறியாகவே கருதப்படமுடியும். இத்தகைய சூழ்நிலையில் விடுதலைப்புலிகள் மட்டும் தான் கதாப்பாத்திரங்கள் என்றால் இவர்கள் ஏன் பாராளுமன்றம் செல்ல வேண்டும்? தமிழ் மக்களைப் பிரதிநிதிப்படுத்துவதாக கூறிக்கொண்டு ஏன் இவர்கள் அரசியலரங்கில் தொழிற்பட வேண்டும்? என்பன போன்ற பல கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன.

இதேவேளை ஏனைய அரசியல் கட்சிகளை தீண்டாமை மனப்பாங்குடன் அணுகும் தமிழர் விடுதலைக்கூட்டணியானது ஆயுதம் ஏந்திய போராட்டத்தின் மூலம் ஈட்டப்பட்ட சாதனைகள் பற்றியோ, இன்னுயிர்களை இழந்தவர்களின் தியாகங்கள் பற்றியோ, கண்டு கொள்வதாக இல்லை.

1948-1977க்கு இடையில் எட்டப்படாத அரசியல் இலக்குகள் 1977-1987க்குள் எய்தப்பட்டன என்பது வரலாறு. வடக்கும், கிழக்கும் தமிழ்பேசும் மக்களின் சரித்திர பூர்வமான வாழிடம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டு ஒரே அலகின் கீழ் நிர்வகிக்கப்படத் தொடங்கியதும், மலையக மக்களின் வாக்குரிமைப் பிரச்சினைக்கு முடிவு கண்டதும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பெறுபேறுகளாக எஞ்சியுள்ளன.

இதற்கு அடிப்படையாக அமைந்தது ஆயுதமேந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளும், சொரியப்பட்ட குருதியும், சிந்தப்பட்ட வியர்வையும் தான். இவ்வாறாக ஈட்டப்பட்ட ஒரு சில வெற்றிகள் கூட கேள்விக்குரியவையாக மாறிக் கொண்டிருக்கின்றன. இதற்கு கொழும்பு அரசாங்கங்களை மட்டும் குறை கூறிக்கொள்ள முடியாது. எதையும் குழப்பிக் கொண்டிருப்பதையே இலக்காக வரித்துக்கொள்ளும் தமிழர்தரப்பு அரசியல் போக்கும் எண்ணிப் பார்க்கப்பட வேண்டியதாகும்.

1990ல் இந்தியா அமைதிப் படை வெளியேறியது முதல் இன்று வரை ஏற்பட்டு வரும் இழப்புக்கள் மூலம் ஈட்டப்பட்ட அரசியல் வெற்றி என்ன என்பது குறித்து தமிழ் மக்கள் இப்போதாவது சிந்தித்தாக வேண்டும்.

வாக்குறுதிகளில் வள்ளல்கள்

ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட பெரிய தமிழ்க்கட்சி என்பது ஈ.பி.டி.பி ஒன்பதில் இரண்டு விலகி நின்றாலும் குடாநாட்டில் பத்துப் பிரதேசபைகளின் நிர்வாகத்தைக் கைப்பற்றியதால் பலமான அத்திவாரம் இருப்பதாக பறைசாற்றிக் கொள்ளும் நிலை ஈ.பி.டி.பிக்கு உண்டென்பது சரியானதுதான்.

ஆனால் அரசியலரங்கில் கடந்த நான்கு ஆண்டுகாலத்திலும் இவர்களால் சாதிக்கப்பட்டது என்ன என்ற கேள்விக்கு விடைகாண்பது இயலாதது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு எனக் கூறப்பட்டு முன்வைக்கப்பட்ட தீர்வுப்பொதி பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்பாக அலசப்பட்ட போது தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத் தொழிற்பட்டவர்கள் மௌனம் காத்தமையே காணக்கிடைக்கின்ற விடயமாகும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கலந்துரையாடல்களின் போது தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகள் குறித்து விலாவாரியாக விபரித்து தீர்வுப் பொதியைச் செழுமைப்படுத்தியிருக்க வேண்டியது இவர்களின் பொறுப்பாக இருந்தது.

குறிப்பாக ஐந்து தமிழ்க்கட்சிகள் சார்ப்பாக முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பாக எடுத்து ரைத்திருக்கவேண்டும்.

தாங்கள் விபரித்த விடயங்கள் தெரிவுக்குழுவின் கவனத்தைப் பெறவில்லையெனின் அவைபற்றி அவ்வப்போது தமிழ்மக்களுக்கு அறிவித்திருக்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பங்களைத் தவறவிட்ட பின்னர் 17பக்கங்களைக் கொண்ட மகஜர் சமர்ப்பித்தோம் என்த் தெரிவித்தது எந்தப் பயனையும் விளைவிப்பதாக இல்லை.

இது தவிர காரணமற்ற கைதுகள் முதல் காணாமற்போனவர்கள் விடயம் ஈறாக எதையும் உருப்படியாகச் சாதித்ததாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வடபகுதியில் படையினரால் கைதாகிக் காணாமற்போனவர்களின் பெற்றோர்களை அலரிமாளிகை வரை அழைத்து வந்

தொடர்ச்சி 11ம் பக்கம் ☞

குறுகிய கட்சி நலன்கள், இயலாமைகள், துணிவின்மை என்பவற்றால் சிக்கிக் கொண்டு, மக்களை அரசியல் ரீதியாக வழிநடத்தும் பாரிய பொறுப்பிலிருந்து விலகிச் செல்லும் போக்கையே பாராளுமன்றத்தின் தமிழ்ப் பிரதிநிதிகள் கைக்கொள்கின்றனர் என்பது கசப்பான உண்மையாகும். அரசியற் பிரச்சினையில் மட்டுமன்றி அன்றாடப் பிரச்சினைகளில் கூட பெறப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையைச் சுட்டிக்காட்ட தெம்பற்றவர்களாகவே இவர்கள் இருக்கிறார்கள்.

இணக்கம் காணும் முயற்சியில் ஈ.பி.ஆர்.எல்.எவ் பங்களிப்பு.

ஆவறும் காற்றில் ஒரு கையை வீசிக் கொள்வதால் ஒருபோதும் ஓசை எழப் போவதில்லை. இரு கைகளையும் சேர்த்து தட்டினால் ஓசை எழுப்பக்கூடும். ஆனாலும் எல்லார் கைகளும் ஒரு சேரத் தட்டப்படும் போதுதான் வரவேற்புக் கிடைக்கும்.

இவ்வாறாக வரவேற்பைப் பெறக்கூடியதொரு நிலையில் தமிழ் மக்களின் அரசியலரங்கம் இல்லையென்பது தான் சாதாரண மக்களின் கவலையாகும்.

குறிப்பாக சிறீலங்கா அரசுக்கு எதிரான ஆயுதம் ஏந்திய எதிர்ப்பியக்கத்தைக் கைவிட்டவர்கள், இலங்கைத்தீவின் ஒருமைப்பாட்டிற்குள் இனப்பிரச்சினைக்கு நீதியான நியாயமான தீர்வு காணப்பட வேண்டும் என்ற ஆவலுள்ளவர்கள், ஜனநாயக அரசியலரங்கில் தொழிற்படுபவர்கள்,என்னும் வகையில் பல்வேறு ஒத்த கருத்துக்களைக் கொண்டிருந்த போதும் கூட முன்னாள் போராளிகள் மத்தியிலும் சரி, தமிழர் விடுதலைக்கூட்டணியும் சரி பரந்துபட்ட ஒரு ஐக்கிய முன்னணியாகப் பரிணமிக்க முடியவில்லை என்பது மறைப்பதற்கோ மறுப்பதற்கோ உரிய விடயமல்ல.

தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் மத்தியில் ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றி நீண்ட நெடிய வரலாறு உண்டு.

தமிழரசுக்கட்சியும், தமிழ்க் காங்கிரசும் இன்னும் பிற கட்சிகளும் இணைந்து தமிழர் கூட்டணியை உருவாக்கியது, 1984ல் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப் புரட்சி அமைப்பு, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ விடுதலைப்புலிகள் என்பன இணைந்து ஈழ தேசிய விடுதலை முன்னணியாகத் தொழிற்பட்டதும், ஐக்கியத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தப் போதுமானது.

ஆனாலும் இந்த ஒற்றுமை நீண்டகாலத்திற்கு நீடித்து விட்டிருக்கவில்லை. என்பது சோகமானது.

அரசியல் கட்சிகள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் 1994 ஆகஸ்ட் பொதுத் தேர்தலுக்கு பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ் எடுத்த முயற்சிகள் பற்றி இங்குவிளக்க வேண்டியது அவசியமானதாகும்.

1994ன் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ்புக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிட்டாத போதும்,1995ல் அரசாங்கம் தீர்வுப் பொதியை முன்வைத்த போது அதனைச் செழுமைப்படுத்த வேண்டும் என்னும் எண்ணத்தில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப்புரட்சி அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து பல்வேறு திருத்தங்களை முன்வைத்தது.

இந்தத் திருத்தங்களை வடிவமைப்பதற்காக கட்சி நலன்களுக்கு அப்பாற்பட்டு நின்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் தொழிற்பட்டது குறிப்பிடத்தக்கது. யாழ் மாவட்டத் தேர்தல் ஆட்சேபனை வழக்கு மீளப்பெறப்பட்டமையை ஒரு உதாரணமாகக் கூறலாம்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இந்தத் திருத்தங்கள் தொடர்பாகப் பேசியிருக்க வேண்டியவர்களான பாராளுமன்ற பிரதிநிதிகள் வாய்மூடி மௌனிகளாக இருந்தது மட்டுமன்றி ஐந்து கட்சிகளின் கூட்டமைப்புக்கு பாராளுமன்ற தெரிவுக்குழுவில் நடக்கும் பேச்சுக்களின் முன்னேற்றம் பற்றியும் எடுத்து விளக்கத்தவறினர்.

இதனால் ஐந்து கட்சிகளுக்கும் இடையே காணப்பட்ட இணக்கம் செல்லாக் காசாகிப் போனது.

இதன் பின்னர் சிங்கள ஆணைக்குழு இனவாத விசத்தைக் கக்கிய போது அதற்கு எதிரான தமிழ் மக்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்பும் முயற்சியில் ஒன்றுபட்டு செயற்பட முனைந்த போதும் அதுவும் கைகூட வில்லை.

இதனாலேயே வவுனியாவிலும், மட்டக்களப்பிலும், திருமலையிலும் மக்களை ஒன்றுதிரட்டி கண்டனக்குரலை வெளிப்படுத்தும் முயற்சியில் தனியாக ஈடுபட வேண்டியதாயிற்று.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு பாராளுமன்றத்தின் நாற்காலிகளில் குந்தியிருப்பவர்கள் பத்திரிகை அறிக்கைகளுடன் தம்பணியை முடித்துக்கொண்டனர்.

மூத்த தலைவர்களையும் நீண்ட பாரம்பரியத்தையும் கொண்டவர்களெனக்கூறிக்கொள்ளும் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் கூட ஐக்கியத்தின் அவசியம் பற்றியும், ஒருமித்த குரலில் பேசுவது குறித்தும் சிந்திப்பதாக இல்லை.

பொதுப் பிரச்சினைகள் குறித்த பகிரங்க கருத்துப் பரிமாறல்கள் என்பதற்குப் பதிலாக மூடப்பட்ட கதவுகளுக்குப் பின் கிசுகிசுப்பதால் தீர்வுகளைக் கண்டுவிடலாம் என்பது போலவே கூட்டணியினரின் போக்குகள் உள்ளது.

அரசியல் பிரச்சினைகள் பற்றி அந்தரங்கத்தில் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் நிலமையே நீடிப்பது விந்தையானது. இதனாலேயே தத்தம் கருத்துக்களை முன்வைத்து விவாதிக்கும் போக்கு மறைந்துள்ளது.

ஏதோ இராணுவ நடவடிக்கைக்கு திட்டம் தீட்டுபவர்கள் போல மூடப்பட்ட அறைக்குள் பேசப்படும் இரகசிய விடயமாக அரசியல் இப்போதும் காணப்படுவது தான் வேடிக்கையானது.

இத்தகைய நிலமைகள் காரணமாகவே எவருக்கும் தெரியாமல் எவ்ரோடும் கலந்தாலோசிக்கப்படாமல் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் திணிக்கப்பட்டது.

தமிழர் தரப்பு பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனையின்றி மேற்கொள்ளப்பட்ட இம்முடிவை கண்டிக்கும் முகமாக எல்லோரும் ஒன்றாகத் தேர்தலைப் புறக்கணிக்கலாம் என்ற ஆலோசனை ஈ.பி.ஆர்.எல்.எவ் இனால் முன்வைக்கப்பட்ட போதும் அது எந்தக் கட்சியாலும் ஒப்புக் கொள்ளப்படவில்லை.

மக்களுக்குப் பிரதிநிதிகள் தேவை உள்ளூர் நிர்வாகத்திற்கு அரசியல் வழிகாட்டல் தேவை என்பவற்றை மனதில் கொண்டால் பொதுப்பட்டியலைத் தயார் செய்து தேர்தலைப் புறக்கணிப்பது மூலம் ஐக்கியத்தையும், ஒற்றுமை உணர்வையும் எல்லோருக்கும் புரியும்படி எடுத்துரைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்ட போதும் எவரும் கண்டுகொள்ளவில்லை.

அரசாங்க தரப்பிடமிருந்தும் சரி, எம்மவர்கள் மத்தியலிருந்தும் சரி எதிர்நோக்கப்படும் அரசியல் சவால்கள் பற்றிப் புரிந்து கொள்ளப்படாமல் ஒருவருக்கொருவர் முகத்தில் கரிபூசும் வகையில் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டது.

அதற்குப் பின்னராயினும் ஒருமித்த குரலில், ஒன்றுபடப் பேசி மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைக் குறைக்கவும், அரசியல் விழிப்புணர்வுகளைத் தூண்டவும், அன்றாடப் பணிகளை சீராக்கவும் முயற்சி எடுக்கப்பட்டபோதும் அதற்கும் போதுமான ஒத்துழைப்பு கிடைப்பதாக இல்லை.

தெரிவு செய்யப்பட்ட சபைகள் முதற்கூட்டம் நடத்துவதற்கே மாதக்கணக்கில் காலம் எடுக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிப் போய்விடும் என்ற அபாயச் சங்கு ஊதப்பட்ட பின்னர் அவசரம் அவசரமாக திட்டங்கள் தீட்டப்பட்டு ஒப்புக்காக ஒப்புதல் கோரவே பிரதேச சபைகளில் ஒரு சில கூட்டப்பட்டன.

இது தவிர வேலையற்றபட்ட தாரிகளின் உண்ணாவிரதம் முதல் வடபகுதி பயணிகளின்போக்குவரத்துக் கோரிக்கைஉட்பட பல்வேறு அன்றாடப் பிரச்சினைகளிலும் மக்கள் தன்னெழுச்சியாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் கூடமாவட்ட மட்டத்திலாயினும் ஒருமித்துச் செயற்பட முடியாத நிலைமையே இன்று வரை நீடிக்கின்றது.

ஆனால் அடிப்படைப் பிரச்சினைக்கான தீர்வைத் தேடும் முயற்சிகளிலும் சரி, அன்றாட அவலங்களைக் களைவதற்கான எத்தனங்களிலும் சரி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அன்றும், இன்றும் என்றும் அனைத்து சக்திகளுடனும் கைகோர்த்துச் செயற்படவே விரும்புகிறது. அவ்வாறே செயற்பட்டும் வருகிறது. ●

பாரபட்சம் தொடர்கிறாதா? வவுனியா கல்வியல்கல்லூரி ஒரு நோக்கு.

இலங்கையில் 11கல்வியியல் கல்லூரிகள். எனினும் இவற்றில் ஏழுகல்லூரிகள் நூறுவீதமும் சிங்கள மாணவர்களுக்காகவென இயங்குவன. மலையகத்தில் செயற்படும் சிறீபாதா கல்வியல் கல்லூரி, அட்டாளைச்சேனை கல்வியல்கல்லூரி, மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரி, வவுனியா கல்வியியல் கல்லூரி என்பவற்றிலேயே தமிழ், மற்றும் முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த தமிழ் மொழி மூல மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

இவைகளில் சிறீபாதா கல்வியியல் கல்லூரியில், ஐம்பது சதவீதம் மலையக மாணவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய ஐம்பது சதவீதத்தில் அரைப்பங்கு மலையகத்தவர்களல்லாத தமிழர்க்கெனவும், மிகுதி சிங்கள மாணவர்களுக்கெனவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அட்டாளைச்சேனை கல்வியியல் கல்லூரி முஸ்லிம் மாணவர்களுக்கானது. மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரியில் தமிழ், முஸ்லிம் இனங்களைச் சேர்ந்தவர்கள் பயில்கின்றனர். எனவே வவுனியா கல்வியியல் கல்லூரியானது வடபகுதி மாணவர்களையும், தமிழர்களையும் பொறுத்தவரையில் முக்கியமானதாகும்.

இங்குள்ள குறைபாடுகள் பல. வவுனியா கல்வியியல் கல்லூரியில் உடற்கல்வி, விஞ்ஞானம், ஆரம்பக் கல்வி என மூன்று துறைகளில் போதனைகள் நடைபெறுகின்றன. சுமார் தொண்ணூறு வீதத்திற்கு மேல் தமிழ் பேசும் மக்கள் வாழும் இப்பிரதேசத்தில் 75வீதம் தமிழ் மாணவர்களும் 25வீதம் சிங்கள மாணவர்களும் அனுமதிக்கப்படுகின்றனர்.

போதிக்கும் ஆசிரியர்கள் முதல் கடைநிலை ஊழியர்கள் வரை வவுனியாவின் இனவிகிதாசாரத்திற்கு தலைகீழானதாகவே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆரம்பக் கல்விக்கான சிங்கள மொழியிலான பயிற்சி நெறிகளுக்காக பதின்மூன்று பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஏழு பேர் நிரந்தரமானவர்கள். ஏனைய ஆறு பேரும் பாடசாலைகளிலிருந்து இணைக்கப்பட்டவர்கள். இதேயளவு தொகையினரே 75சதவீத தமிழ் மாணவர்களுக்காகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விகிதாசாரம் பாரபட்சமானதும் நீதியற்றதுமாகும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இங்குள்ள மூன்று பயிற்சி நெறிகளுக்கும் தலா அறுபதுபேர் தெரிவாகிறார்கள். உடற்கல்வித்துறையை எடுத்துக்கொண்டால், 165 புள்ளிகள் அடிப்படைத்தகைமையாகும். எனினும் அகில இலங்கை ரீதியாகவும், அடுத்து மாகாணம், மாவட்டம் என்ற வரிசைகளிலேயே தெரிவு இடம்பெறுகிறது.

ஆனால் வவுனியா மாவட்டம் இன்று நடைபெறும் யுத்தத்தின் மையப்பகுதியாகவுள்ளது இதனால் இந்த மாவட்டத்திலிருந்து நாடளாவிய ரீதியில் அல்லது மாகாண மட்டத்தில் இடம்பெறும் போட்டிகளில் பங்குபெறும் வாய்ப்பு குறைவாக வேயுள்ளது.

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ் மாவட்டங்களிலுள்ள நிலமையைக்கருத்திற் கொண்டே இங்கு மாணவர்கள் அனுமதிக்கப்படவேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பு.

மேலும் மாணவர்களுக்கு உணவுக்காக வழங்கப்படும் மானியம் வவுனியா மாவட்ட விலை வாசிகளுடன் ஒப்பிடுகையில் போதுமானதாக இல்லை. இங்குள்ள கல்வி சாரா ஊழியர்களின் விபரம் வருமாறு ஐந்து லிகிதர்களில் மூவர் மட்டுமே தமிழர். பாடசாலை வேலையாளர்கள் ஏழு பேரில் மூவர் மட்டுமே தமிழர்கள். சமையலறை வேலையாளர்கள் பதினான்கு பேரில் ஆறுபேர் மட்டுமே தமிழர்கள். தச்சு வேலைக்கெனவும் ஒரு சிங்களவர் நியமனம் பெற்றுள்ளார்.

26கோடி ரூபா செலவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 1992, 93ம் ஆண்டுகளில் கட்டப்பட்ட கட்டிடத்தில் கூட வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

மழை பெய்தால் ஒழுக்குகள் மூலம் கட்டிடத்தில் நீர் சிந்தும் நிலைமை. கல்லூரி அமைந்துள்ள ஐம்பது ஏக்கர் நிலப்பரப்பும் மேடும் பள்ளமுமாகத் தான் இப்போது காட்சிதருகிறது. இடம் பெயர்ந்து வந்தவர்களின் பாவனைக்காக சில காலம் உட்பட்டிருந்த இக்கல்லூரியின் மலசலகூடங்கள் உட்பட சில பகுதிகள் திருத்தத்தை வேண்டிநிற்கின்றன. இந்தத் திருத்தங்களுக்காக மட்டும் சுமார் ஒன்பதரை லட்சம் ரூபா தேவைப்படுவதாக கல்லூரி அதிபர் அழகரட்ணம் தெரிவிக்கின்றார்.

செய்யப்படவேண்டியவை.

★ இந்த மாவட்டத்தின் இன விகிதாசாரம் பேணப்படும் விதத்திலேயே ஆசிரியர் மற்றும் ஊழியர்களின் நியமனங்களும் இருக்க வேண்டும்.

★ மாணவர்கள் அனுமதியிலும் இந்த மாவட்டத்தின் நிலையைக் கருத்திற்கெடுத்தும் மாவட்ட அளவில் முன்னுரிமை கற்பிக்கப்படும் மூன்று துறைகளுக்கும் வழங்கப்படவேண்டும்.

தொடர்ச்சி 08ம் பக்கம்☞

நவம்பர் 19 தோழர் பத்மநாபா பிறந்த நாள்

தோழர் பத்மநாபா அவர்கள் மறைந்து ஒன்பதுஆண்டுகளாகிவிட்டன. இன்று அவருடைய 47வது பிறந்த தினம். இன்று இந்த நாட்டில் நிலவும் சூழ்நிலையோடு ஒட்டி தோழர் பத்மநாபாவின் பங்களிப்பை நினைவு கூரவேண்டும்.

மானிட நேயம் ஜனநாயக உணர்வு ஐக்கிய மனப்பான்மை ஆகியன அவரின் பொது வாழ்வின் அருங்குணங்களாக இருந்தன. அதிர்ந்து பேசாமை நேரடியாக சுருக்கமாக பிரச்சனைகளை விளங்கப்படுத்தும் ஆற்றல் எத்தகைய இடர்மிகு சூழலிலும் தளராத மனவுறுதி ஆகியன அவருடைய சொந்தக் குணாதிசயங்களாக அமைந்தன.

தமிழ் மக்களின் போராட்டத்தை அவர் ஒரு தனித்த பிரச்சனையாக அணுகவில்லை.மலையக மக்கள், முஸ்லிம் மக்கள், சாதாரண சிங்கள மக்களுடனான ஐக்கியத்துடன் தொடர்பு படுத்தியே அவர் தமிழ் மக்களின் விடுதலையை எண்ணினார்.

இது மாத்திரமல்ல உலகில் எங்கெங்கு மக்கள் ஒடுக்கு முறைக்குள்ளாகினார்களோ அவற்றிற்கெல்லாம் தாம் ஆதரவளிக்க வேண்டும் என்ற எண்ணப் பாங்கு அவரிடம் இருந்தது. அவர் ஒரு சர்வதேசியவாதியாகவும் திகழ்ந்தார்.

அவர் வேலை செய்த தளங்களை எண்ணிப்பார்த்தாலே அவருடைய உணர்வுகள், உயர்ந்த இலட்சியங்கள் தெளிவாகப் புலனாகும். குடாநாட்டில் சாதிரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்பட்ட மக்கள் திருகோணமலை கரையோர மீனவர்கள் மலையகத்திலிருந்து இந்தியா சென்று துன்பங்களில் உழன்று கொண்டிருந்த தாயகம் திரும்பிய மக்கள் இவர்கள் பால் அவர்ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். வேலை செய்யும் போது சாமானிய மக்களில் ஒருவராகவே அவர் வேலைசெய்ய முற்பட்டார்.

தென்னிலங்கை இடதுசாரி இயக்கங்களுடனும், இந்தியாவின் இடதுசாரி இயக்கங்களுடனும், தொடர்ச்சியாக தந்தை பெரியாரின் கருத்துக்களை வலியுறுத்திப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த திராவிட இயக்கங்களுடனும் அவர் நல்லுறவைப் பேணினார்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு கொள்கையைக் கடைப்பிடிக்கும் இந்தியா எப்போதும் எமது நண்பன் என்று கருதியிருந்தார். பாலஸ்தீனத்தின் விடுதலைக்கான பிரபல முன்னணியுடன் உறவை வலுப்படுத்தினார். அவர்களின் பாசறையில்தான் அவர் பயிற்சி பெற்றார். இந்திய இடதுசாரி இயக்கங்களின் முதுபெரும் தலைவர்கள் பலரும் துடிப்பான இந்த ஈழத்து இளைஞனிடம் பேரபிமானம் கொண்டிருந்தனர்.

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட தோழர் பத்மநாபா தான் பாடசாலையில் படிக்கும் நாட்களிலேயே தேசிய விடுதலைக்கான மாணவர் இளைஞர் இயக்கங்களில் ஆர்வம் கொண்டிருந்தார். மாணவர் பேரவை ஈழ விடுதலை இயக்கம், ஈழப்புரட்சி அமைப்பு ஆகியவை அவருடைய வரலாற்றையும் உள்ளடக்கியவையே.

தோழர் பத்மநாபாவின் 47வது பிறந்த தினத்தை முன்னிட்டு 19.11.1998 பள்ளிமுனை பங்குத்தந்தையும், மன்னார் மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் செயலாளரும் மற்றும் தோழர்களும் பொதுமக்களின் குடிநீர்ப்பிரச்சினையை தீர்க்கும் முகமாக தண்ணீர் தாங்கியை திறந்துவைத்தனர்.

1981ல் நடைபெற்ற முதலாவது அமைப்பாளர் மாநாட்டில் அவர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமாக தெரிவு செய்யப்பட்டார். பசி பட்டினி இயக்கத்தின் பொருளாதார வறுமை என்பன அவரை நிலைகுலைய வைக்கவில்லை. "நோ புறொப்பிளம்" என்று சொல்லிக்கொண்டு வேலை செய்வார்.

தான் விரும்பிய ஆனந்தி அவர் களை திருமணம் செய்து சில மாதங்களிலேயே அவர் படுகொலை செய்யப்பட்டார். குடும்ப வாழ்கை அவருக்கு குறுகிய காலம் கொண்டதாகத் தான் இருந்தது.

1980களின் முற்பகுதிகளிலிருந்தே அவர் இயக்கங்களின் ஐக்கியத்திற்காகவும் சகோதரப் படுகொலைகளுக்கெதிராகவும் செயற்பட்டார். 1985ல் திம்புப் பேச்சுவார்த்தையில் நான்கு இயக்கங்கள் ஈழ தேசிய விடுதலை முன்னணி என்ற பெயரில் ஒன்றாக அமர்வதற்கான நிலையைத் தோற்றுவித்ததில் தோழர் பத்மநாபாவின் கணிசமான பங்களிப்பு இருந்தது. ஆனால் அந்த ஐக்கியம் கூட மிகக் குறுகிய கால ஆயுளையே கொண்டிருந்தது.

புலிகளின் சகோதரப் படுகொலை ஆரம்பித்ததன் பின்னர் மக்களின் நம்பிக்கைகக்கு அதுபேரிடியாக அமைந்தது. 1986ன் முற்பகுதியிலிருந்து மாற்று இயக்கங்களைமுடக்கும் வேலையைப் புலிகள் மேற்கொண்டார்கள். அப்போது எதிரிக்கும் நண்பனுக்குமுள்ள வித்தியாசத்தை எடுத்துரைத்ததோடு இயக்கங்கள் ஐக்கியப்படாமல் சகோதர யுத்தத்தை நடத்தினால் மக்கள் நம்பிக்கை இழப்பர் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

1986ன் இறுதிப் பகுதியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயற்பாடுகள் சீர்குலைக்கப்பட்ட பின்னரும் அவர் மனம் தளரவில்லை. இரவு பகலாகக் கண் விழித்து இயக்கத்தை மீளக் கட்டியமைப்பதிலும் தளத்தில் திரும்பவும் வேலைசெய்வதற்கானநிலையைத் தோற்றுவிப்பதில் அயராது பாடுபட்டார்.

மட்டக்களப்பிலும், வன்னியிலும் காடுகளில் தலைமறைவாக இருந்த தோழர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர் பணிகளை மேற்கொண்டார். எமது இயக்கம் தடை செய்யப்பட்டு சில மாதங்களிலேயே நாட்டின் நிலவரங்களில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. கொக்கட்டிச்சோலை போன்றஇடங்களில் இராணுவ ஊடுருவலும் படு கொலைகளும் இடம்பெற்றன.

வடக்கில் யாழ்ப்பாணத்திற்கு பொருளாதாரத் தடையை முற்று முழுதாக அமுல் படுத்திக் கொண்டு சகல மார்க்கங்களிலும் யுத்தமொன்று முன்னெடுக்கப்பட்டது. ("ஒப்பரேசன் லிபரேசன்") நடந்து கொண்டிருந்த யுத்தத்தை ஆட்சேபித்து யாழ் வான் பரப்பில் இந்தியா விமானங்கள் பறந்து உணவுப் பொட்டலங்களை வீசின. இது பொருளாதாரத் தடைக்கெதிரான ஆட்சேபனையின் குறியீடாக அமைந்திருந்தது.

இந்த சூழ் நிலையில் அன்றைய ஜே.ஆர். அரசின் மீது அழுத்தத்தைப் பிரயோகித்து இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது. இது அமுலாவதைக் கண்காணிக்க இந்திய அமைதி காப்பு படை அனுப்பப்பட்டது. இந்த சூழ் நிலையில் நாம் இந்தியாவுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்பதில் தோழர் பத்மநாபா திட உறுதி கொண்டிருந்தார்.

பலரும் தயங்கிய போது இந்திய–இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதிலும் வடகிழக்கு மாகாணசபையை அமைப்பதிலும் தோழர் பத்மநாபா தலைமையிலான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி திட உறுதியுடன் நின்றிருந்தது.

இவை எல்லாவற்றையும் மேற்கொள்வதில் தனது முழு ஆற்றலையும் பிரயோகித்த தோழர் பத்மநாபா தான் எந்தப் பதவியையும் ஏற்கவில்லை. மற்றைய தோழர்களை ஏற்று நடத்தப் பணித்தார். மாகாணசபைக்கு இந்தியாவின் உதவியுடன் அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கும், அதற்காக தமிழர் இயக்கங்களை ஐக்கியப்படுத்துவதிலும் இடையறாது உழைத்தார்.

ஆனால் அன்றைய பிரேமதாச அரசு மாகாணசபையின் செற்பாடுகளைச் சீர்குலைப்பதிலும், அதிகாரங்களைப் பரவலாக்காமல் இழுத்தடிப்பதிலுமே குறியாக இருந்தது. இறுதியாக பிரேமதாச அரசின் சூழ்ச்சி, புலிகளின் ஒத்துழைப்பினால் அது சீர்குலைக்கப்பட்டது. திரும்பவும் இந்தியாவிற்கு தற்காலிகமாக பின்வாங்க வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டது.

ஆயினும் பாராளுமன்ற உறுப்பினர்களாக இந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்களும் மற்றும் ஒருபகுதி தோழர்களும் இலங்கையிலிருந்து செயற்பட்டார்கள். தோழர்கள் மத்தியில் ஏற்பட்ட பல்வேறு குழப்பங்கள் நெருக்கடிகளுக்கு மத்தியில் கட்சியைச் சீர் செய்து செயற்படுத்துவதற்காக இரண்டாவது காங்கிரசிற்கான ஆயத்த வேலைகளில் அவர் ஈடுபட்டிருக்கையிலேயே அவர் படுகொலை செய்யப்பட்டார்.

அவர் சென்னையில் வைத்து படுகொலை செய்யப்பட்டபோது தமிழகமே அதிர்ந்தது. தமிழக மக்கள் பேரதிர்ச்சி அடைந்தார்கள். நாம் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு உணர்வு பூர்வமாக ஆதரவளித்தோம். ஆனால் இவ்வளவு குரூரத்தனமாக நடந்து கொள்கிறார்களே என்று மனவேதனைப்பட்டார்கள்.

தோழர் பத்மநாபா அவர்களுடன் பன்னிரண்டு தோழர்களும் இந்தியப் பிரசை ஒருவரும் படுகொலை செய்யப்பட்டனர். அவருடைய இறுதி ஊர்வலத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், கலாச்சார இலக்கிய அமைப்புக்கள், பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கு பற்றினர். சென்னை ராஜாஜி மண்டபத்திலிருந்து கிருஷ்ணாம் பேட்டை மயானம் வரை ஊர்வலத்தில் பங்குபற்றிய மக்கள் அவர் எத்தகைய மாபெரும் தலைவர் என்பதற்கும் எவ்வளவு தூரம் மக்களின் அன்பிற்குப் பாத்திரமாக இருந்தார் என்பதற்கும் சான்று.

தோழர் பத்மநாபா நாமம் நீடூழி வாழ்க!

பாரபட்.....

07ம் பக்கம் தொடர்ச்சி

★ மாணவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் உதவித்தொகை மாவட்டத்தின் விலைவாசியைக் கருத்திற்கெடுத்து அதிகரிக்கப் படவேண்டும்.

★ பல கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டிடத் தொகுதியில் ஏற்பட்டுள்ள பழுதுகள் உடனடியாகத் திருத்தப் படவேண்டும்.

★ இதன் 50ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலப்பகுதி நிரவப்பட்டு சமதளமாக மாற்றப்பட வேண்டும்.

வவுனியா கல்வியியல் கல்லூரி பல இனங்களின் கல்லூரியாக இருப்பது நல்ல விடயம் தான். ஆனால் இனவிகிதாகாரத்தைத் தலைகீழாகப் புரட்டுவதாக அது இருக்கக் கூடாது.

பல கல்லூரிகள் தனிச்சிங்களக் கல்லூரிகளாக இருக்கும் சூழ் நிலையில் வவுனியாவில் நடைபெறுவது அநீதி என்றே கருத வேண்டியிருக்கிறது. கல்வி உயர் கல்வி அமைச்சு இந்த விடயத்தைச் கருத்திற்கெடுக்குமா? அல்லது யுத்தம் நடக்கும் பகுதிதானே எக்கேடுகெட்டாலென்ன என்று மண்ணுக்குள்தலையைப் புதைத்துக்கொள்ளுமா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தோழர் ஆனந்தன்
மாவட்ட செயலாளர்
வவுனியா

பிரமுகராக இருப்பவர். ஆனால் பிரபல்யமாகாதவர். அரசாங்கத்திற்கு ஆதரவாக இருப்பவர். ஆனால் அதிகாரிகளால் குறிப்பாக தமிழ் அதிகாரிகளால் கண்டு கொள்ளப்படாதவர். ஆயுதங்களுடன் இருப்பவர். ஆனால் போராளியாக அல்ல. கண்டுபிடிக்க முடியாவிட்டால் வாருங்கள் பதினாறாம் பக்கத்திற்கு.

இவரைத்தெரிகிறதா?

வான்வரை உயருது படைப்பலம் ஆனால் மக்களோ பட்டினியில்...?

மாரி மழை, குளங்களெல்லாம் பெருக்கெடுத்து ஓடுகின்றன. வாந்திபேதி நோய் ஒரு புறம். பசியும் பஞ்சமும் மறுபுறமாய், மக்கள் மரங்களுக்கு கீழும், தெருவீதிகளிலுமாய் அலையும் சோகக் காட்சி. வறுமையாக வாழ்ந்தாலும், தமக்கென்றோர் குடிசையில் வாழ்ந்த யாழ்ப்பாண மக்கள், புலிகளின் வற்புறுத்தலால் வன்னிக்கு வந்து, இன்று இருப்பதற்கும் குடிசையில்லாமல் அலைவது நெஞ்சை நெகிழவைக்கின்றது.

மாற்றுடையில்லாமல் கந்தலான உடையுடன் வீதியோரங்களில் பிச்சைக்காரரிலும் விட கேவலமாக இருக்கும் குமர்ப்பெண்கள். இப்படியான நிகழ்வுகளை வார்த்தைகளில் வடிக்க முடியாது. இவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் போக விரும்பினாலும், யாழ் கடல் நீரேரியூடாக போவதென்றால் தலைக்கு குறைந்தது 2000 ரூபா தேவை.

மன்னார் வந்து அகதிக்கப்பலில் போவதென்றால் கூட மன்னார் வருவதற்கே ஏறத்தாழ 400ரூபா இவர்கள் செலவு செய்தாக வேண்டும். வேலையில்லை, பணம் இல்லை, சாப்பிட வழியில்லை, உடுத்திடத் துணி இல்லை என்ற நிலையில், கடவுள் மீது பாரத்தைப் போட்டு நடப்பவை நடக்கட்டும் என்று நடைப்பிணமாகவே வாழ்கின்றார்கள்.

ஆனால் மறுபுறத்தில் எமது "விடுதலைப்போராளிகள்" பஜீரோ ஜீப்புகளிலும், ஹொண்டா மோட்டார் சைக்கிள்களிலும் ஆளனி, பாதுகாப்புகளுடன் வீதிவலம் வருகின்றார்கள்.

அண்மையில் தமிழீழ அரசியல் பிரிவுத் தலைவர் கரிகாலனுக்கும், புலிகளின் மருத்துவத்துறையில் பணிபுரியும் இடைக்காட்டைச் சேர்ந்த டாக்டர் பத்மலோசனி என்ற பத்துவுக்கும் வெகு விமரிசையாக திருமணம் நடந்தேறியது.

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், பாரிசில் சர்வதேசப் பேச்சாளராக இருந்து, பணமோசடிகளில் ஈடுபட்டதன் காரணமாக 'தேசியத்தலைவர்' பிரபாகரனால் அழைக்கப்பட்ட லோரன்ஸ் திலகர், சொர்ணலிங்கம், சூசை, பால்ராஜ், தமிழ்ச்செல்வன் எனப் பல முக்கியஸ்தர்கள் திருமணவைபவத்தில் கலந்து கொண்டதாக, நம்பகமாக அறியமுடிகின்றது.

மக்களுக்கு நிவாரண உதவிகள் இல்லை, அரசாங்கம் பொருளாதாரத் தடை விதிக்கின்றது. மக்களை பட்டினி போட்டே சாகடிக்கின்றார்கள் என்ற பிரச்சாரமும், அப்பிரச்சாரத்துக்கு வலுச்சேர்க்க ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதமென தொடர்ச்சியான போராட்டம் அவையும் வீடியோவில் படமாக்கப்பட்டு வெளிநாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதனைப் பார்த்தாவது தமிழ் மக்களோ, அன்றித்தொண்டர் ஸ்தாபனங்களோ தமது உதவிகளை இரட்டிப்பாக்குவார்கள் என இங்கு போராளிகள் தீவிரமாக நம்புகின்றார்கள். ஒரு பக்கத்தில் மக்களுக்கு உணவில்லை என போராட்டத்தை நடாத்தும் விடுதலைப் புலிகள், மறுபுறத்தில் மக்களின் நிவாரணத் தேவைகளுக்காக அனுப்பும் பொருட்களையே கடத்திச் செல்கின்றார்கள். கூட்டுறவுக்கடைகளுக்கு அனுப்பும் பொருட்களில் பெரும் பகுதிகளை போராளிகளே தமது தேவைகளுக்காக எடுத்து விடுகின்றனர்.

மிகுதியாக உள்ளதுதான் மக்களுக்கு போய்ச் சேர்கின்றது. இப்பொருட்கள் அவர்களுக்கு இரண்டு வாரத்திற்கும் போதாது அது மாத்திரமல்ல, போராளிகள் எடுத்த பொருட்களுக்கான பணமும் மக்களுக்கு விற்கும் பொருட்களில் இருந்தே வசூலாகின்றது.

இதனால் 7ரூபாய் மண்ணெண்ணை 50ரூபாயில் இருந்து 100ரூபா வரை விற்பனையாகின்றது. இதனைப் போன்றே சவர்க்காரம் 30ரூபா, சீனி 75ரூபா என பொருட்களின் விலையும் தாறுமாறாக ஏற்றப்படுகின்றது.

இவ்வாறுதான் வன்னித் தமிழ் மக்கள் போராளிகளால் பராமரிக்கப்படுகின்றார்கள். உணவுப் பொருளோ, மண்ணெண்ணையோ, மருந்தோ, அவர்களுக்கான கோட்டா போனபின்னரே, மிகுதி மக்களுக்குப்போகின்றது. இதனால் புலிப்படையில் சேர்ந்தால் தான் குறைந்த பட்சம் ஒரு நேரச்சாப்பாடாவது கிடைக்கும் என்ற நிலையே இங்கிருந்து வருகின்றது.

இவை தவிர கிளிநொச்சி இராணுவ முகாம் தகர்ப்பைத் தொடர்ந்து, பரவலான ஆயுதக் கண்காட்சிகள், தாக்குதல் தொடர்பான வீடியோப் படக்காட்சிகளும் நடைபெற்றுவருகின்றன. ஆட்டிலறி, மோட்டார், என பல வகையான ஆயுத தளபாடங்களின் கவர்ச்சியும், வறுமையும் சின்னஞ்சிறார்களை விடுதலைப்புலிகளின் பக்கம் இழுக்கின்றது என்பதில் ஐயமில்லை.

ஆனால் அதுகூடப்போதாதால், வலுக்கட்டாயமாகவும் சிறுவர்கள் படையணிகளில் இணைக்கப்படுகின்றார்கள். பாடசாலையில் கல்விகற்கும் 8ம் வகுப்புக்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியர் பாடசாலையில் இருந்தே கடத்தப்படுகின்றனர். தப்பி ஓடி வருபவர்களை வீட்டிற்கு வந்து மீண்டும் பிடித்துச் செல்கின்றனர். போகாவிட்டால், 2வருடம் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் மிரட்டப்படுகின்றனர்.

அதேசமயம் நீண்ட காலம் புலிப்படையில் சேவையாற்றிய பல போராளிகள், படையணிகளுக்கு பொறுப்பாக இருந்தோர் பலர் விலத்துவதற்கு கடிதங்களை கொடுத்துள்ளனர். ஏன் விலத்துகின்றீர்கள் என்று கேட்டால், தமிழீழம் கிடைக்கப்போவதில்லை. ஒரு சிலரின் தேவைகட்காகவே யுத்தத்தை தொடர்கின்றார்கள். இதில் போய் ஏன் மரணிக்க வேண்டும் என்றும் அலுத்துக்கொள்கின்றார்கள்.

மாங்குளத்திலிருந்தும், கிளிநொச்சியில் இருந்தும் தினசரி சாரசரி 4அல்லது 5போராளிகளின் உடல்களாவது மாவீரர் சமாதிக்கு அடக்கத்திற்கு வருகின்றது. அவர்களுக்கு அஞ்சலி தெரிவிப்பதற்காக கடையடைப்பும், கறுத்தகொடிகளும், சோக கீதங்களும் அன்றாட நிகழ்ச்சியாகி விட்டன. முன்னர் என்றால் மரணித்த மாவீரனின் குடும்பத்திற்கு, நிதியுதவிகள் உட்பட பல சலுகைகள் இருந்தன.

ஆனால் அந்நிலை எல்லாம் இப்பொழுது மாறிவிட்டது. மரணச் சடங்கிற்கும், 31வது நாள் செலவிற்குமென சிறு உதவிகள் செய்யப்படுகின்றன. இது தவிர வேறு எந்தச் சலுகைகளும் கிடையாது.

இப்பொழுது விடுதலைப்புலிகளிடம் இரண்டு சிறிய ரக விமானங்கள் உண்டென்றும், அதில் இருவர் செல்ல முடியும் எனவும் கூறப்படுகின்றது. இதற்கான ஒடு பாதை வற்றாப்பளையை ஒட்டிய பிரதேசத்தில் உண்டெனவும், அப்பகுதிகளுக்கான மக்களின் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுவதுடன், விடுதலைப்புலிகளின் வான் படை விமானத்தில் இருந்து பரசூட் மூலம் குதிக்கும் பயிற்சிகளிலும் ஈடுபட்டுவருவதாகவும் மக்கள் பேசிக்கொள்கின்றார்கள்.

அண்மையில் சிறீலங்கா அரசாங்கத்தால் மூழ்கடிக்கப்பட்ட சரக்குக் கப்பலில் இருந்து மிகப் பெருமளவிலான பொருட்களை போராளிகள் ஏற்கனவே எடுத்து விட்டார்கள் என்றும் அதன்பின்பே கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாகவும் பேசப்படுகின்றது. இங்கு நடமாடும் புதிய 3சக்கரவண்டிகள், மோட்டார்ச் சைக்கிளில் இருந்து அதனை உண்மையென நம்பக்கூடியதாகவும் உள்ளது.

அரிசியும், மீனும் ஓரளவுக்கு மலிவாகக் கிடைக்கின்றது. மற்றும்படி போராட்டத்தில் மரணித்தாலும் அதுவரையாவது புலிகள் மாத்திரம் தான் இங்கு வாழ்க்கின்றார்கள். மற்றவர்கள் எல்லாம் தமது முழு வாழ்க்கையையும் இழந்து அன்றாடம் மரணித்துக்கொண்டே இருக்கின்றார்கள். என்று விடிவு? என்று தீர்வு வரும்? என்று அமைதி வரும்? என்று சமாதானம் வரும்???.

மாரி மழை, குளங்களெல்லாம் பெருக்கெடுத்து ஓடுகின்றன. வாந்திபேதி நோய் ஒரு புறம். பசியும் பஞ்சமும் மறுபுறமாய், மக்கள் மரங்களுக்கு கீழும், தெருவீதிகளிலுமாய் அலையும் சோகக் காட்சி. வறுமையாக வாழ்ந்தாலும், தமக்கென்றோர் குடிசையில் வாழ்ந்த யாழ்ப்பாண மக்கள், புலிகளின் வற்புறுத்தலால் வன்னிக்கு வந்து, இன்று இருப்பதற்கும் குடிசையில்லாமல் அலைவது நெஞ்சை நெகிழவைக்கின்றது.



தீர்வுத்திட்டத்தின் இன்.....

முதலாம் பக்கம் தொடர்ச்சி

4. விடுதலைப்புலிகள் மட்டுமே முக்கியமான சக்திகள் ஏனைய அனைவரும் பக்கவாத்தியக்காரர்களே என்றசாரப்பட தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரான ரஜாசப் பரராசசிங்கம் அண்மையில் வெளியிட்ட கருத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ் வன்மையாகக்கண்டிக்கிறது. தமிழர் விடுதலைக்கூட்டணியானது விடுதலைப்புலிகளின் பக்கவாத்தியமாக தொழிற்பட விரும்பினால் அதனை அவர்கள் வெளிப்படுத்தலாம். ஆனால் எல்லாத் தமிழ் அரசியல் கட்சிகளும் அவ்வாறு தான் செயற்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுவது முற்றிலும் பொருத்தமற்றதொன்றாகும். த.வி.கூ. பாராளுமன்ற உறுப்பினரின் இந்தக் கருத்து ஜனநாயகக் கோட்பாடுகளை மட்டுமன்றி விடுதலைப்புலிகளின் மிரட்டலுக்கும் மத்தியில் அவர்களுக்கு வாக்களித்த ஆயிரமாயிரம் மக்களின் உணர்வுகளையும் எள்ளிநகையாடுவதாக இருப்பதோடு யாழ்ப்பாணத்தில் தமது உயிர்களை அர்ப்பணம் செய்த அதன் இரண்டு முதல்வர்களையும் சிறுமைப்படுத்துவதாக உள்ளதாகவே ஈ.பி.ஆர்.எல்.எவ் கருதுகிறது.

5. யாழ்ப்பாணம்-கொழும்பு போக்குவரத்து பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பது தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. கடல் மற்றும் வான் மார்க்கத்தில் சாதாரண மக்கள் பாதுகாப்பாக பயணம் மேற்கொள்ளக்கூடிய ஒரு ஒழுங்கை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எவ் வலியுறுத்துகிறது. பொதுமக்கள் போக்குவரத்து படையினரின் தேவைகளுடன் சம்பந்தப்படுத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டுமெனவும் நாம் வலியுறுத்தும் அதேசமயம் வட பகுதிக்கான ஆயுததளபாடமற்றும் படையினரைக் கொண்டு செல்வதற்கான மனித கேடயங்களாக பொதுமக்கள் பயன்படுத்தப்படக் கூடாதென வற்புறுத்துகின்றோம். அதேவேளை பொதுமக்களின் போக்குவரத்திற்கு தடங்கல்களை ஏற்படுத்தும் விடுதலைப்புலிகளின் செயல்களையும் கண்டனம் செய்கிறோம்.

6. யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளைச் சீர்குலைக்கும் புலிகளின் செயற்பாடுகளை நாம் கடுமையாகக் கண்டிக்கிறோம். தற்போதைய சூழ்நிலையில் எமது மக்கள் ஆளுமையுள்ள சிவில் நிர்வாகம் செயற்பட வேண்டுமென விரும்புகின்றனர். இவற்றைச் சீர்குலைப்பதால் மக்களுக்கு எந்தப் பயனும் கிட்டப்போவதில்லை. எனவே மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாட்டை விடுதலைப்புலிகள் சீர்குலைக்க முனையக் கூடாதெனவும் வலியுறுத்துகின்றோம்.

7. செம்மணியில் உள்ளதாகக் கூறப்படும் பாரிய புதைகுழிகளைத் தோண்டி உண்மைகள் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்படுவதுடன் குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டுமென வேண்டுகின்றோம். அதேவேளை 1990முதல் கிழக்கு மாகாணத்தில் காணாமற் போனவர்கள் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ள ஒரு அமைப்பு நிறுவப்பட வேண்டுமெனவும் அரசாங்கத்தைக் கோருகின்றோம்.

8. உணவு மருந்துப் பொருட்கள் உட்பட தேவையான அத்தியாவசிய பொருட்கள் யாவும் வன்னிப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென அரசாங்கத்தைக் கோருகின்றோம்.

9. மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான மின் விநியோகத்தைச் சீர்குலைக்கும் வகையில் விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் செயற்பாடுகள் நிறுத்திக்கொள்ளப்படவேண்டும். இத்தகைய செயற்பாடுகளால் எமது மக்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை விடுதலைப்புலிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். அதேவேளை இந்தச் சூழ்நிலையை திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமலிருப்பதற்கான காரணமாக அரசாங்கம் காட்டக்கூடாது எனவும் சுட்டிக்காட்டுகின்றோம். ●

சொலமன் பதில்கள்

தமிழர் விடுதலைக்கூட்டணி வரவு செலவுத் திட்டத்தை எதிர்ப்பதாக முடிவு செய்துள்ளதே ஏனைய கட்சிகள் என்ன செய்யப் போகின்றன?

இ. உதயகுமார், யாழ்ப்பாணம்.

கடந்த பல வருடங்களாக தமிழர் விடுதலைக்கூட்டணி வரவுசெலவுத்திட்டத்திற்கு ஆதரவாகவே வாக்களித்து வந்நது. ஆனால் மக்களின் முழுமையான எதிர்ப்பைச் சந்திக்க விரும்பாததாலேயே கூட்டணி எதிர்ப்பதாக முடிவு செய்துள்ளது. ஏனைய கட்சிகளில் அதிக பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளவர்கள் ஈ.பி.டி.பி கட்சியினரே. அவர்கள் ஆளும்கட்சியினருக்கு ஆலவட்டம் தூக்கியே பழக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு யுத்தம், மனித அழிவுகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதிலும் விட, அரசுடன் இணைந்து நாலு பணம் சம்பாதிக்கலாமா என்றே சிந்திப்பார்கள்.

புதிய ஆளுநர் நியமனம் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

க. செந்தில்வேலவன், கொழும்பு.

அரசுக்கு முழுமையான இராணுவ நிர்வாகம் ஒன்று வட-கிழக்கில் தேவையாக உள்ளது என்பதையே இது புலப்படுத்துகின்றது.

புளொட் தளபதி புதிய ஆளுநரின் நியமனத்தை வாழ்த்தி வரவேற்றுள்ளாரே?

க. கிருபாகரன், வவுனியா.

1988ல் வடக்கு கிழக்கு மாகாணசபை அமைக்கப்பட்ட போது இருந்த சூழ்நிலை வேறு இன்றைய அரசியல், இராணுவச் சூழ்நிலை வேறு. எனவே ஈ.பி.ஆர்.எல்.எவ் மாகாணசபை நடாத்திய பொழுதும் ஓர் இராணுவ அதிகாரியே இருந்தார் என்று சப்பைக்கட்டு கட்டுவதில் அர்த்தமில்லை. முதலாவது அன்றைய காலகட்டமும் இன்றைய காலகட்டமும் ஒன்றல்ல. இரண்டாவது அப்பொழுது மாகாண அரசொன்று பதவியில் இருந்தது. ஆளுநர் அதிகாரமில்லாதவராகவே இருந்தார். ஆனால் இன்று வட-கிழக்கில் மாகாண அரசு இல்லாதால் அதற்குரிய முழு அதிகாரமும் ஆளுநருக்கே உண்டு. இதனால் இப்பொழுதுள்ள ஆளுநர் தான் விரும்பிய எதனையும் செய்ய முடியும்.

வன்னிக்கான உணவுத்தடை கிழக்கிற்கான மின்சாரத்தடை ஒப்பிட முடியுமா?

மு. மயில்வாகனம், களுவாஞ்சிக்குடி.

அரசைப் பொறுத்த வரையும் புலிகளைப் பொறுத்த வரையும் மக்களின் அத்தியாவசியத் தேவைகள் என்பன அவர்களைப் பொறுத்த வரையில் இராணுவ இலக்குகளாகவே கருதப்படுகின்றன. வன்னிக்கு உணவுத் தடை, பொருளாதாரத் தடைகளை உருவாக்குவதன் மூலம் புலிகளின் போராட்டசக்தியைக் குறைக்கலாம் என அரசு நம்புகின்றது. அவர்களைப் பொறுத்தவரையில் மக்களின் அவலங்களைப் பற்றி அக்கறையில்லை. புலிகளும் கூட மின்சாரத்தை துண்டித்தால் அரசு நெருக்கவாரத்திற்குள்ளாகும் என்று கருதுகின்றதேயல்லாமல், இவை மக்களின் அடிப்படைத் தேவை என்பதை உணர்வதாக இல்லை. மொத்தத்தில் இரு பகுதியினருக்கும் யுத்தம் தான் முக்கியமே தவிர, மக்களின் அவலங்கள் அவர்களுக்கு இரண்டாம் பட்சமே.

அரசாங்கம், சமாதான முயற்சியையும் வர்த்தக சம்மேளனத்திடம் கையளித்துள்ளதே. என்ன காரணம்?

பா. குமார், திருகோணமலை.

உலகின் முதலாளித்துவக் கொள்கை என்பது திறந்த பொருளாதாரம், உலகமயமாக்கல் என்ற வடிவிலேயே இன்று நகர்ந்து கொண்டிருக்கின்றது. இதன் அடிப்படை என்பதே சகல பொருளாதார நடவடிக்கைகளையும் தனியார் மயமாக்கல் என்பதே. இலங்கையும் கூட அரச கம்பனிகள், தொழிற்சாலைகள், போக்குவரத்து, தொலைத்தொடர்பு போன்ற பல அமைப்புக்களை தனியாருக்கு விற்று வருவதை நீங்கள் அறிவீர்கள். அதன் அடிப்படையில் சமாதானத்தை உருவாக்கும் முயற்சியையும் இப்பொழுது வர்த்தக சம்மேளனத்திடம் கையளித்துள்ளதாகத் தோன்றுகின்றது. உன்மையில் அரசின் இயலாமையின் வெளிப்பாடே இது.

தென்னாபிரிக்காவில் ஜனாதிபதி உதிர்த்த "தமிழ் மக்கள் பூர்வீகக் குடிகள் அல்ல" என்ற கோட்பாடு பற்றி என்ன கருதுகின்றீர்கள்?

சி. பாலசிங்கம், யாழ்ப்பாணம்.

எவ்வளவுதான் முற்போக்கு பேசினாலும், சிங்களத் தலமைகள் இன்னும் குறுகிய இனவாதத்துக்குள் இருப்பதையே இது வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றது. முதலில் தனது பத்திரிகைத் துறை செயலாளர் ஊடாக தான் அப்படி பேசவில்லை என மறுத்தவர், அது உண்மையென நிரூபிக்கப்பட்ட பின்னரும் கூட அது தொடர்பாக குறைந்த பட்சம் கவலை அடைவதாகக் கூட அவர்சொல்ல விரும்பவில்லை. அதன் பொருள் சிங்கள மக்கள் மட்டும் தான் இந்நாட்டின் சொந்தக்காரர் என்ற கருத்தையே ஜனாதிபதியும் கொண்டுள்ளதாகவே தோன்றுகின்றது. ஜனாதிபதியின் இக்கூற்றைக் கண்டிக்க முடியாத ஈ.பி.டி.பித் தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், ஜனாதிபதி சிங்களவர், தமிழர் இருபாலாருமே பூர்வீகக் குடிகள் அல்ல என்று கூறினார் என வக்காலத்து வாங்கத் தொடங்கியுள்ளது இன்னும் வேடிக்கையானது.

கொழும்பில் இருந்து யுத்தத்தை கைதட்டி வரவேற்போரைப் பற்றி என்ன கருகின்றீர்கள்?

ம. தங்கவடிவேல், மட்டக்களப்பு.

யுத்தத்தில் தோற்கக்கூடாது. தோற்றால் சிங்கள வீரம் என்பது அடிபட்டுப் போய்விடும். அத்துடன் இது சிங்களவரின் நாடு தமிழருக்கு இங்கு இடமில்லை என்று நம்பும் சிங்களப் பேரின வாதிகள், யுத்தத்தில் தமிழ் இளைஞர் நூற்றுக்கணக்கில் கொல்லப்படும் போது, அதனை கைதட்டி வரவேற்று ரசிக்கின்றனர். இப்பேரின வாதிகளின் பிள்ளைகள் எல்லாம் வெளிநாட்டில், அவர்களுக்கு சிங்கள மக்கள் சாகின்றார்கள் என்பதிலும் விட தமிழனை ஒழிக்க வேண்டும் என்றே கூக்கிரலிடுவார்கள். மறுபுறத்தில் புலிகள் தோற்றுப் போனால் தமிழன் தோற்றுப் போவான், புலிகளின் அச்சுறுத்தலால் தான் கொழும்பில் சிங்களவன் எம்மீது கைவைப்பதில்லை என நம்பும் தமிழர்கள். அது மாத்திரமல்ல குறுகிய தமிழ் இனவாதத்தைக் கொண்ட தமிழரும் யுத்தத்தில் எவ்வளவு அதிக சிங்கள மக்கள் சாகின்றார்களோ, அதனை வரவேற்பவர்களாகவே உள்ளார்கள். இவர்களும் யுத்தத்தால் எந்த விதத்திலும் பாதிப்படையாமல் இருப்பவர்களே. எனவே இந்த இரு சாரரின் கருத்துக்களையும் ஒதுக்கித்தள்ளி நீதியான, நிரந்தரமான தீர்வொன்றைக் காண்பதே இன்றைய காலத்தின் தேவையாகும்.

யாழ் மக்களின் போக்கு வரத்து நெருக்கடி எப்பொழுது தீரும்?

தி. சிந்தரன், திருகோணமலை.

பிரயாணிகள் விமானம் சுட்டு வீழ்த்தப்படுகின்றது. பிரயாணிகள் கப்பல் கடத்தப்பட்டு மூழ்கடிக்கப்படுகின்றது. இச்சூழ் நிலையில் பிரயாணிகளுக்கான போக்குவரத்தை நடாத்த யார்தான் முன்வருவார்கள்? பிரயாணிகளுக்கான போக்கு வரத்தை நடாத்த பல வர்த்தகர்கள் தயாராகவே உள்ளனர். ஆனால் கப்பல் கடத்தப்படமாட்டாது என்பதை புலிகள் உத்தரவாதப் படுத்துவார்களா?

தமிழீழக் காங்கிரஸ் ஆகுமா?

தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா! சுவர்ணவாகினியில் சிங்களத்தில் விளாசிய தமிழ்ப் பிரமுகரின் வார்த்தைகளில் வீரம் கொப்புளித்தது. வியர்க்க, விறுவிறுக்க புலிகளின் ஆதரவாளர் எனப் பிரகடனம் வேறு. இரகசிய பொலீசார் விசாரணை செய்யலாம் என்ற கிசுகிசு கிளம்பிய உடனேயே சீமான் மலேசியா பயணமாகிவிட்டார். அவரின் உரையைக் கேட்டு எவரும் உணர்ச்சிவசப்படப்போவதில்லை என்பது உண்மைதான். ஆனால் பொலீஸ் நிலையங்களிலும், சிறைச்சாலைகளிலும் தமிழன் என்று சொல்லித் தலை குனிந்து நிற்கும் பலரை நேரில் சந்திக்கும் அண்ணை இப்படிப் பொறுப்பில்லாமல் கதைக்கலாமா? அது சரி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு தமிழீழக் காங்கிரஸ் என்று பெயர் மாற்றமாவது செய்யலாமே!

எக்காலம்

பழங்கதையளைக் கேட்டுப் புளிச்சுப் போச்சு. 1956ல் தனிச் சிங்களச் சட்டம், 1958ல் சிறீ எதிர்ப்பு போராட்டம், 1962ல் சத்தியாக்கிரகம், 1983ல் இனக்கலவரம் எண்டெல்லாம் பழையதுகள் கதைச்சது காணாது என்டு இப்ப புராதன குடிகள் பற்றியும் ஆராய்ச்சி. நிகழ்காலம், எதிர்காலம் பற்றி அரசியல் தலைவர்கள் சிந்திக்கப் போவது எக்காலம்?

நன்றி மறப்பது நன்றன்று

யாழ்ப்பாண நகரக் கட்டளை அத்தகாரியாக சுசந்த மென்டிஸ் பதவி வகித்த போது நாடிச் சென்று உதவிகள், ஒத்தாசைகள் பெற்றவர்கள் அநேகம். வியாபாரிகள் முதல் பிரமுகர்கள் வரை பலரது பாராட்டுக்களும் அவருக்குக் கிட்டியிருந்தது. தமது வீட்டு வைபங்களுக்கு அழைத்து விருந்து கொடுத்து மகிழ்ந்தவர்களும் உண்டு. யாழ்ப்பாணத்தில் சந்திக்க அஞ்சி கண்டியிலுள்ள அவரது இல்லத்திற்குச் சென்றும் சிலர் சந்தித்தனராம். இத்தகையவர்களில் ஒருவர் கூட அவரது இறப்புக்கு அனுதாபம் தெரிவித்து ஒரு வார்த்தையினும் தெரிவிக்கவில்லையென்று மனம் நொந்து போய் கூறினாராம் திருமதி மென்டிஸ். தமிழர் பண்பாடு கேள்விக்குறியாகிறதோ? உதவி பெற்றவர்களுக்கு இது சமர்ப்பணம்.

பழைய கதை

அன்றாடப் பிரச்சினைகளால் அலைக்கழிக்கப்படும் மக்களின் வாழ்க்கை பற்றிக் கவனத்தை ஈர்க்க அரசியல் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் முயற்சிக்க வேண்டும். அதற்காக அரசியல் அழுத்தம் பிரயோகிக்க முயற்சிக்கலாம். அதைப்பற்றி யோசிக்க வெளிக்கிட்டால் 1983இல் ராஜினாமா செய்ததால தான் எல்லாம் கெட்டது என்கிறார் சங்கரி அண்ணர். பழையதுகளை இன்னும் எத்தனை காலத்துக்கு கதைச்சுக்கொண்டிருக்கப்போறமோ?

உள்வீட்டு இழுபறி

ஜனாதிபதியின் எதிர்காலத் திட்டம் என்ன என்பது பற்றித் தெரியாமல் அமைச்சர்களை குழம்பப் போயுள்ளனராம். அடுத்த வருடத்தில் எந்தத் தேர்தல் நடத்தப்படவுள்ளது என்பதே பரமரகசியமாம். மாகாணசபைகளுக்கான தேர்தலா? அல்லது ஜனாதிபதித் தேர்தலா? இதனிடையில் வரவு-செலவுத் திட்டம் யாரது தயாரிப்பு என்பதிலும் சர்ச்சைகளாம். மே மாதம் முதல் கடைசிவரை ஈடுபட்டதாக ஜனாதிபதியும், நான் தான் தயாரித்தேன் எனப் பிரத் நித் அமைச்சர் பேராசிரியர் பீரிசும் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

மனிதாபிமானம் வாழ்க

லயன் எயார் விமானத்தை சுட்டு விழுத்திய புலிகள் இறந்து போனவர்களின் சடலங்கள் உரியவர்களிடம் கிடைக்க வழி செய்யவில்லை. பரபரப்பு அடங்கிப்போயுள்ள சூழ்நிலையிலும், பிராயச்சித்தம் தேடும் வகையிலும் சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களைக் காட்டத் தயாராக உள்ளனராம். மன்னார் ஆயர் தெரிவிக்கின்றார். நிந்த கிளிநொச்சியில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் உறவினர்களிடம் கிடைக்காமல் படையினரே தகனம் செய்து விட்டதாகக் கவலை தெரிவித்து கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளதாம். வாழ்க புலிகளின் மனிதாபிமானம்.

காட்டிடையில் கேட்கும் குரல்

வடக்கு, கிழக்கில் சுமார் 17,000 கைம்பெண்களும், சுமார் 20,000 அநாதைக் குழந்தைகளும் இருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின், செய்திக் குறிப்பு கூறுகிறது. அத்துடன் இத்தகையவர்களின் கல்வி மற்றும் அடிப்படை வாழ்க்கைத் தேவைகளுக்காக வெளிநாட்டிலுள்ள, தமிழர்கள் மாதாந்தம் முப்பது யு.எஸ். டாலர்கள் வீதம் தரும்படியும் கோரப்பட்டுள்ளது. ஆனால் பலாத்கார ஆள்பிடிக்கு இத்தகையவர்கள் தான் இலகுவான இலக்குகளாக்கப்பட்டுள்ளதாக வானுயர்ந்த காட்டிடையிலிருந்து எழும்பும் குரல்கள் கூறுகின்றன.

பத்திரிகைகளில் பதவி துறப்பு

யாழ் மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. மாநகர முதல்வர்கள் அடுத்தடுத்து படுகொலைக்கு உள்ளான நிலையிலும் பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னரும், புலிகளின் ஜனநாயக விரோதப் போக்கை அம்பலப்படுத்த வேண்டுமென முயற்சிக்கப்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எவ்., த.வி.கூ., புளொட், ரெலோ என்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து கூட்டாக தயாரித்த மகஜர் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதில் கையெழுத்திட பெரிய ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகளுக்கு உத்தரவு கிடைக்கவில்லை. ஆனால் இப்போது சபை உறுப்பினர்களின் பதவிதுறப்பு கடிதங்கள் பத்திரிகைகளில்..... தலை இருக்க வால் ஆடலாமோ?

விபரீதம்

யாழ்ப்பாணத்தில் சீருடையினரால் கைது செய்யப்பட்ட உதயகுமார் உயிரிழந்தமை குறித்து யாழ்ப்பாணத்தில் விசாரித்த நீதி வழங்குபவர்களுக்கு சந்தேகம். விடயம் தலைநகருக்கு பறந்தது. சந்தேகத்திற்கிடமில்லாமல் தற்கொலையென்ற தீர்ப்பும் வந்துவிட்டது. குடாநாட்டு நீதி மன்றக்கதவுகளைப் பூட்டி வைத்தால் விபரீதம் என்பது இப்போதாவது புரியுமா?

தேவை கிருபை தேவை

குடாநாட்டின் அபிவிருத்தி, உள்ளூராட்சி உறுப்பினர்களின் பாதுகாப்பு பற்றி கலந்துரையாட அழைப்பு வந்தது. மேலிடத்துக்குப் போக முதல் சந்தித்துப் பேசி கலந்துரையாடலாம் என்டால் பிரதிநிதிகளுக்கு நேரம் வாய்க்கவில்லை. காத்திருந்த நேரத்திலாவது ஆற அமரப் பேசியிருக்கலாம். அதுக்கு இயலவில்லை. இருட்டறைக்குள் கறுப்பு பூனையைத் தேடினது போல உள்ளூராட்சி சபைகளுக்கு டபிள்கப் வாகனமும், மோட்டார் சைக்கிளும் தான் இப்போதைய தேவையாக உரைக்கப்பட்டது. புதுப்புது வாகனங்களில் ஓடித்திருந்து கட்டிடங்கள் சிலவற்றை உருவாக்கிவிட்டால் அபிவிருத்தி வந்து தான் விடுமாக்கும். எல்லாத்துக்கும் தேவ கிருபை வேண்டும்.

அழைப்பதில்லை

தலைநகரில் அரசாங்க விழாக்களுக்கு குறைவில்லை. இந்து சமய கலாச்சாரத் திணைக்களம் கூட அரச நாடக விழா, முத்தமிழ் விழா என்றும் பெரும் எடுப்பில் விழா நடத்துகிறது. கொழும்பில் நடக்கும் இத்தகைய விழாக்கள் பற்றி கொழும்பில் தமிழ்க்கட்சிகளுக்கு அதிகாரிகள் மறந்து போய்க் கூட அழைப்பிதழ் அனுப்புவதில்லை. அமைச்சரவையில் இடம்பிடித்துள்ள மலையகத் தலைவர்களுக்கு மாலைகளுடன் வரவேற்பு. பாராளுமன்றத்தில் அரசை ஆதரிக்கும் உறுப்பினர்களும் கூட கண்டுகொள்ளப்படுவதாக இல்லை.

சமாதான முன்னணியில் குழப்பம்

சமாதானத்திற்கான தேசிய முன்னணி அண்மையில் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. சுமுகமான ஆரம்பம், இடைநடுவில் குழப்பம், பின்னர் கூட்டம். இடை நடுவில் சமாதான முன்னணியின் முயற்சியைப் பற்றி கேள்விகள் எழுப்பி குழப்பத்தை உண்டு பண்ணியவர்களுக்கும் கூட உயர் மட்டத்தொடர்புகள் இருக்குதாம். சமாதான முயற்சிகளுக்கு பச்சைக்கொடியா? சிவப்புக் கொடியா? காட்டப்படுகிறது என்று கலந்து கொண்டவர்களுக்கு குழப்பம்.

கடமைகளை கண்.....

06ம் பக்கம் தொடர்ச்சி

து பெற்றுக்கொடுக்கப்பட்ட வாக்குறுதி கூட நிறைவேற்றப் படவில்லை என்பதையிட்டு இவர்கள் கவலைப்படுவதாக இல்லை.

சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்தவர்களின் முன்பாகப் போய் வாக்குறுதி வழங்குவதில் ஆர்வம் காட்டப்பட்ட அளவுக்கு அப்பாவிகளின் விடுதலைக்கு உத்தரவாதம் பெற்றுக் கொள்ளப்பட இயலவில்லை.

யாழ்ப்பாணத்தில் வேலையற்ற பட்டதாரிகளின் கோரிக்கைகளை முனை மழுங்கச் செய்ய முயற்சிக்கப்பட்ட அளவுக்கு அவர்களது கோரிக்கைகள் நிறைவேறுவதற்கான வேலைகள் முன்னெடுக்கப்படவில்லை.

பிரின்சஸ் காஷ் கப்பலில் பொருட்களை ஏற்றிய வர்த்தகர்களின் சீற்றத்தைத் தணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதே யல்லாமல், நட்டஈடு பெறுவது வரையில் இட்டுச் செல்ல இயலவில்லை.

இவ்வாறாக எத்தனையோ விடயங்களை அடுக்கிச் செல்ல முடியும். எனினும் சுருக்கமாகக் குறிப்பிடுவதானால் மக்களின் கோப உணர்வுகள் வெளிப்படுவதைத் தவிர்ப்பதிலேயே ஈ.பி.டி.பி கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது எனலாம்.

அதாவது அரசாங்கத் தரப்பின் நியாயவாதிகள் போலவே மக்கள் முன்னிலையில் ஈ.பி.டி.பியினர் செயற்பட்டு வருகின்றனர் எனலாம்.

எனினும் இவர்களுக்கு அன்றாடப் பிரச்சினைகள் குறித்த விடயங்களில் கூட அரசாங்கத் தரப்பால் வழங்கப்படும் வாக்குறுதிகள் காப்பாற்றப்படுவதாக இல்லை என்பது நோக்கத்தக்கது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் இலங்கையின் ஒருமைப்பாட்டிற்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்தோ, ஆயுதப் போராட்டத்தை நிறுத்துவது பற்றியோ திட்டவட்டமான கருத்துக்கள் எதுவும் முன்வைக்கப்பட்டதாக இல்லை.

எனினும் ஆயுதம் ஏந்திய எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து தனிநாடு அமைக்கப் படலாம் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்து போயுள்ளது வெளிப்படை.

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென்று விடுதலைப்புலிகளை நோக்கி முன்வைக்கப்படும் கோரிக்கையைக் கூட இலட்சியத்தைக் கைவிடும் படியான நிர்ப்பந்தமாகவே அவர்களால் கடந்த காலங்களில் பார்க்கப்பட்டுள்ளது என்பது புரிந்துகொள்ளப் பட வேண்டியதாகும்.

இதேவேளை மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளையும், துன்ப துயரங்களையும் தமது பிரச்சாரப்பொருளாகப் பயன்படுத்திக் கொண்டு சிறீலங்கா அரசாங்கத்தின் மீதான அவநம்பிக்கையை வெளிப்படுத்துவதே அவர்களது தொழிற்பாடாகும்.

விடுதலைப்புலிகளின் இத்த கைய பிரச்சாரங்களுக்கு தீனி போடும் வகையிலேயே அம்மையார் அரசாங்கத்தின் செயற்பாடுகளும் அமைந்துவருகின்றன.

மாறி மாறிப் பதவிக்கு வந்த அரசாங்கங்களால் அரசியல் ரீதியாக ஏமாற்றப்பட்ட அனுபவங்களும், இழப்புக்களின் கொடுமைகளைச் சந்தித்த கோப உணர்வுகளும், சந்தேகப் பார்வைகளால் துளைத்து எடுக்கப்படும் அவலங்களும் மலிந்து போயுள்ள மக்கள் மத்தியில் இவற்றிற்கு மறுப்புக் கருத்துக்கள் முன்வைப்பது மிகவும் கடினமானதாகும்.

அதிலும் சுலபமாக உணர்ச்சி ஊட்டக்கூடிய விடயங்களை மேலெழுந்த வாரியாக எடுத்து ரைத்து விடுவது அறிவுக் கண்களை மறைப்பது வரை இட்டுச் சென்று விடக்கூடும்.

இத்தகைய சூழ்நிலையில் தமிழ் அரசியல்கட்சிகளின் பொறுப்பும் கடமையும் பாரியதாகும். ஆனால் இன்றைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனைப் புரிந்து கொள்ளவில்லை என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது.

ஜனநாயக அரசியலரங்கில் செயற்படும் தமிழ்க்கட்சிகளுக்கிடையே ஒற்றுமையீனம் நிலவுவது என்பது ஒன்றும் இரகசியமானதல்ல. அரசியல் கட்சிகளுக்கிடையிலான ஒற்றுமையும், ஐக்கியமும், அடிப்படை நோக்கில் இருந்துதான் உருவாக வேண்டும்.

முன்னர் சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போது கொண்டிருந்த எண்ணங்களும், நம்பிக்கைகளும் இப்போதும் வலுவுடையதாக இல்லை என்பது உணர்ந்து கொள்ளப் பட வேண்டும்.

இலங்கையின் ஒருமைப்பாட்டிற்குள், இனப்பிரச்சினை தீர்க்கப்படமுடியும் என்ற நம்பிக்கையை ஊட்டுவதும், ஆயுதமேந்திய எதிர்ப்பின் மூலம் ஆக்கபூர்வமான பெறுபேறுகள் பெறப்படுவதை விடவும் அழிவுகளும் அவலங்களுமே அதிகமாகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதும் இந்தக் கட்சிகளின் தோள்களில் சுமத்தப்பட்டுள்ள பாரிய பொறுப்பு.

எனினும் இந்தப் பொறுப்பை இவர்கள் எந்தளவுக்கு நிலைநாட்டியுள்ளனர் என்பதுதான் இன்றுள்ள கேள்வியாகிறது. அதேவேளை தமக்குரிய பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் இருக்கக்கூடிய தடைகளையும், முட்டுக்கட்டைகளையும் மக்கள் முன்னெடுத்துச்சென்று மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வைத் தூண்ட வேண்டியதும் இவர்களது கடமையாகும்.

கட்சி நலன்கள் இயலாமைகள், துணிவின்மை என்பவற்றினால் மக்களை அரசியல் வழிநடத்து வதில் பின்நிற்கும் போக்கையே இன்றைய தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்கள் கைக்கொள்கின்றார்கள் என்பது கசப்பான உண்மையாகும். ●

மூப்பட்டுள்ள.....

03ம் பக்கம் தொடர்ச்சி

இதேவேளை யாழ்ப்பாணம் அல்லாமல் வேறு ஒரு பகுதிக்கு போக்குவரத்து துண்டிக்கப்படுமானால் அந்தப் பிரச்சினை எப்படிக் கையாளப்பட்டிருக்கும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். சாதாரண இயற்கை அனர்த்தத்தால் போக்குவரத்து ஒரு சில நாட்கள் தடைப்படுவது கூட சாதாரண மக்களை எவ்வளவுக்குப் பாதிக்கும் என்பதை எவரும் புரிந்து கொள்ளலாம்.

இத்தகையவற்றிற்கு மத்தியில் கடந்த செம்டம்பர் 29ம் திகதி முதல் இன்று வரை யாழ்ப்பாணக்குடாநாட்டிற்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருப்பது எத்தகைய பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பது உணர்ந்து கொள்ளப்பட வேண்டும். சாதாரண மக்களுக்கான போக்குவரத்து தொடர்பு துண்டிக்கப்பட்டிருப்பதால் ஏற்படும் பாரதூரமான நெருக்கடிகள் பற்றி குறிப்பிட்டு விளக்க வேண்டியது அவசியமில்லை.

ஆனால் போக்குவரத்து தொடர்பின்மைகளால் விளையக்கூடிய மனிதாபிமானப் பிரச்சினைகள் பற்றி சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொண்டாக வேண்டும்.

இரண்டு வயதுக்கு குறைவான தமது பேரக்குழந்தையை வைத்திய சிகிச்சைக்காக கொழும்புக்கு கடந்த செம்டம்பர் 15ம் திகதி கொண்டு வந்திருந்தார் திருமதி கலாவதி சண்முகநாதன். சத்திரசிகிச்சை செம்டம்பர் 20ம் திகதி முடிவுற்றது. அதன் பின்னர் விமானப் பயணம் தடைப்பட்டுவிட்டது.

தாயாரின் பராமரிப்பு இல்லாமல் குழந்தையை வைச்சிருக்கவும் ஏலாமல் நான் படும்திண்டாட்டம் ஆருக்கு விளங்கப் போகுது. என்று ஏங்குகிறார் அவர்.

பதவி உயர்வுக்கான நேர்முகப்பரீட்சைக்காக வந்திருந்த தியாகலிங்கம் இரண்டு மாதங்களாக திரும்பிப் போகும் வழிதெரியாமல் தவிக்கிறார். இதேபோல இன்னமும் பலரது கதைகள் அடுக்கிக் செல்லப்பட முடியும்.

படையினருக்கான விநியோக மார்க்கத்தை துண்டிப்பது என்பதன் பெயரால் இந்த மக்கள் அனுபவிக்கும் துயரங்களுக்கு யார் பொறுப்பாளிகளாக இருக்க முடியும்? துப்பாக்கி வேட்டுக்களும், எறிகணை வீச்சுக்களும் இல்லாமல் யுத்தம் சாதாரணமக்களின் நாளாந்த வாழ்க்கையில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் கண்டு கொள்ளப்படுவதாக இல்லை என்பதே கவலைக்குரியதாகும். ●

குறுக்கெழுத்துப் போட்டி–40



இடமிருந்து வலம்

1. ஐம்பதுக்கு ஐம்பது கேட்டவர். இவரது ஜூனியரின் நீண்ட நாள் கனவு எம்.பி. பதவி.
6. கட்டளை திரும்பியிருக்கிறது.
8. முற்காலத்தில் வரலாற்று முக்கியம் வாய்ந்த செய்திகள் பொறிக்கப்பட்ட செப்புத் தகடு. (குழம்பி)
10. மயிர் நீப்பின் உயிர் வாழா மானம் மிகுந்ததாம்.
12. மரம், செடி, கொடிகளுக்குப் பொதுப் பெயர்.
13. குளிர்ச்சியோ, சக்கரமோ திரும்பியிருக்கிறதே!
14. பிடித்து ஆட்டுவதாக நம்பப்படும் கெட்ட ஆவி.
15. விஷ்ணு திரும்பியிருக்கிறார்.
16. திரும்பியிருக்கும் வாசனைத் திரவியம்.
18. மதியத்திற்குப் பின்னான காலத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடும் இரண்டெழுத்து.
19. உடன்படுவதைத் தெரிவிக்கும் பதில்.
20. குற்றமும் இதுதான், நாணயமும் இதுதான்.
21. குழந்தை.
22. மூன்றெழுத்தில் ஓர் ஊர். முதெலழுத்தில்லாவிட்டால் வேண்டும் வேண்டாததைப் பிரித்துக் கொள்ளலாம்; இடையெழுத்தில்லாவிட்டால் முகத்தில் வளர்க்கலாம்.
23. மழை வருமுன் வானம், 'தண்ணி' போட்டபின் மனிதர்.
24. குளிர் காற்று.
26. குறுஞ் சிரிப்பு. (குழம்பி)
28. தனக்குத் தனக்கென்றால் படக்குப் படக்கென்னுமாம் இது.
29. வணக்கம். 'இனி உன் சகவாசமே வேண்டாம்' என்று போட்டது திரும்பிவிட்டது.
30. நாட்டியம்.

மேலிருந்து கீழ்

1. அடுத்த மாதம் வரும் பண்டிகை.
2. அரசகுலத்துப் பெண்கள் வசித்த அந்தப்புர மாளிகைப் பகுதி. (தலைகீழ்)
3. எந்தச் செயலுக்கும் இதை எதிர்பார்ப்பது இயல்பு.
4. உருண்டையான இனிப்புத் தின்பண்டத்திற்கு கடைசி எழுத்தில்லை.
5. இரக்கம் அல்லது பரிவு. (தலைகீழ்)
7. பகட்டு.
9. குதிரை. (தலைகீழ்)
11. மந்திரத்தாலும் செய்யலாம் வாய் சாதுரியத்தாலும் செய்யலாம்.
14. தொடுகையில் உணரப்படும் பசைத் தன்மை.
16. 1999. வாசகர்களுக்கு எமது – வாழ்த்துக்கள்.
17. கப்பி; சுற்றும் விளையாட்டு சாதனம்.
19. சோதனை அல்லது ஆராய்ச்சி செய்பவர்.
20. மன்மதன்.
25. பகலோன் தெறுங் கிரணம் பாய்பறவை யெச்சம் மிகமேல் உறாதகற்றும் விண்ணின் – முகிலதனால் பெய்யு மழையைத் தடுக்கும் பேரழகுமாம் ஒருவர் கையில் 'இது' இருந்தக்கால். (தலைகீழ்)
27. மலைப் பொந்து; சிங்கத்தின் இருப்பிடம்; மனிதர்களும் வாழ்ந்ததுண்டு. (தலைகீழ்)
28. இசைக்கு ஆதாரமான ஒலி; 'குடி'மகன்களும் இதை 'ஏத்து'வதாகச் சொல்வதுண்டு.

விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.

புதிய கண்ணோட்டம்
த.பெ.இல: 442
கொழும்பு

குறுக்கெழுத்துப் போட்டி–39 விடைகள்:

இடமிருந்து வலம்:

1. செம்மணி
3. பரிசோதனை
7. கம்
8. கசப்பு
9. சிட்டுக்குருவி
11. சவலை
12. தக
14. பிரகடனம்
16. கம்பி 17. மார்
18. தெரு 19. சீர்
21. விரல்
23. வேகம்
25. ததும்பு
27. ரப்ப(ர்)
29. அப்பியாசம்
31. மும்பை
32. அடை
33. பாலை

மேலிருந்து கீழ்:

1. செகசிற்பியர்
2. மட்டுநகர்
3. பகருவம்
4. சோகை
5. தப்பிதம்
6. புனை
7. சகுனம்
10. விலை
13. கபிலம்
15. டமாரம்
16. கருவேப்பிலை
20. சீதனம்
22. அம்புவி
24. கரப்பா(ன்)
26. தும்பை
27. பயா
28. தாமு
30. சடை

சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

ரா. ராகுலநாயகி
20, பதுளை வீதி,
செங்கலடி.

பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:

1. மா. செல்லத்துரை
   474,மின்சாரநிலைய வீதி, திருமலை.
2. திருமதி சந்திரசிறி
   புகையிரத நிலையம், மன்னார்.
3. க. கதிரவேலு
   பண்டாரி குளம், வவுனியா.
4. எம்.எஸ். ஜெயவீரரெத்தினம்
   22,வண்டிங்ஸ் ஒழுங்கை, மட்டுநகர்.
5. திருமதி சிவசுந்தரம்
   192 கோவில் வீதி, மஸ்கெலியா.

இவர்தான் அவர்.

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் சார்பில் சுயேட்சைக் குழுவாக யாழ்ப்பாண தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு 1056 வாக்குகளுடன் பாராளுமன்றத்திற்கு தெரிவானவர். இவர் மூன்றாவது பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்ற வராவார். அளவெட்டி மகா வித்தியாலத்தில் கல்வி பயின்ற இவர் க.பொ.த உயர்தரம் வரை படித்துள்ளார். வடபகுதி அரசியலுடன் பன்னிரண்டு வருடங்கள் தொடர்புடையவர். 1040 வாக்குகள் ஊர்காவற்துறைத் தொகுதியிலிருந்தும், 9வாக்குகள் வட்டுக்கோட்டைத் தொகுதியிலும், மானிப்பாய், யாழ்ப்பாணம் தொகுதிகளிலிருந்து தலா ஒவ்வொரு வாக்குகளையும் பெற்றவர். இவரது பெயர் உமாபதி பாஸ்கரன். யாழ்ப்பாண மக்களின் பிரதிநிதியாக பாராளுமன்றத்தில் பதவி வகிக்கும் இவர், பாராளுமன்ற விவாதங்களில் காத்திரமான பங்களிப்பை வழங்கிய தாகவோ, பாராளுமன்ற தெரிவுக்குழு அமர்வுகளில் ஆக்கபூர்வமாகத் தொழிற்பட்டதாகவோ கடந்த நான்கு ஆண்டுக்காலத்திலும் அறியப்படவில்லை.

உள்ளூராட்சியில் மக்கள் பிரதிநிதிகள் அச்சுறுத்தப்படுவது ஏன்?

விதுரன்

யாழ் மாவட்டத்தில் கடந்த 14வருடங்களுக்கு பின்னர் உள்ளூராட்சிசபைகளுக்கு பிரதிநிதிகள் தேர்தல்மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். யாழ் மாவட்டத்தின் 12பிரதேச சபைகள் மூன்று நகரசபைகள். யாழ் மாநகரசபை என்பவற்றுக்கும் கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்குமான பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் உள்ளூராட்சி மன்ற தேர்தலை அறிவித்தவுடன் தேர்தலில் போட்டியிடுவதற்கு தமிழ் அரசியல் கட்சிகளும், இந்த கட்சிகளின் சார்பில் போட்டியிட பல பொதுமக்களும் முன்வந்தனர்.

அதேவேளை யாழ் குடாநாடு இருக்கும் நிலையில் இங்கு என்ன தேர்தல் என்று எழுந்த கண்டனக்குரல்களுக்கும் குறைவில்லை.

இரண்டு மேயர்களை கொன்று ஏனையோருக்கு மிரட்டல் கடிதங்களை அனுப்பியும் உள்ள புலிகள் தேர்தலுக்கு முன்னர் இவ்வாறான கடுமையான நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை.

தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருந்த வேட்பாளர்களுக்கோ ஏனையோருக்கோ பெரியளவில் தடையாய் இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த தேர்தலில் போட்டியிடவோ வாக்களிக்கவோ மக்கள் முன் வரப் போவதில்லை என்று புலிகள் கருதியிருக்கலாம். அல்லது உலகம் பூராவும் உற்றுநோக்கி கொண்டிருந்த வேளையில் ஜனநாயகரீதியான செயற்பாடுகளுக்கு தாம் தடையாக இருப்ப தாக காட்டி தமது பெயருக்கு மேலும் களங்கத்தை சேர்க்க அவர்கள் விரும் பாதிருந்திருக்கலாம்.

தேர்தலில் போட்டியிட்டு பதவிக்கு வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியைச்சேர்ந்த இரு மேயர்களை கொன்றொழித்த புலிகள் தேர்தலில் போட்டியிடவேண்டாம் என உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் தேர்தல் சமயத்தில் வெளியிடவில்லை.

அதுமாத்திரமல்ல போட்டியிட்டு தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் இருவர் கொல்லப்பட்ட போதும் அதனை வெளிப்படையாக உரிமைகோருவதற்குப் புலிகள் துணியவில்லை. இதுவே புலிகளின் செயலை எடைபோட போதுமானதாகும்.

தமிழ்க்கட்சிகள் உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிட்டது, இப்போது இவற்றின் நிர்வாக அதிகாரத்தை ஏற்றிருப்பது யாவும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக தமிழ் கட்சிகள் உள்ளூராட்சிசபைகள் என்ற அரைகுறைத்தீர்வை ஏற்றிருப்பது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் புலிகள் கூறுவதையே தமிழ் சூழலில் பலரும் பேசியும் எழுதியும் வருகின்றனர்.

உள்ளூராட்சிசபைகள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு தடையாக இருப்பதாக கூறி அவற்றின் செயற்பாட்டை தடுத்து விடுவதற்கான எத்தனிப்புக்களே இவை.

யாழ் குடாநாட்டில் தேர்தல் ஒன்றை நடாத்தியதன் மூலம் அரசாங்கம் தனது வல்லமையை உலகுக்கு பறைசாற்றும் வாய்ப்பை பெற்றிருக்கலாம்.

ஆனால் உள்ளூராட்சி சபைகள் தமிழ்க்கட்சிகளின் அதிகாரத்தின் கீழ் செயற்படுவது அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் சாதகமான நிலையை ஏற்படுத்திதரும் என்று கூறிவிட முடியாது.

1986க்குப்பின் ஆயுதம் தாங்கிய இதர இயக்கங்களின் செயற்பாட்டுக்கு தடைவிதித்து அந்த இயக்கங்களை அழிக்க நினைத்த புலிகள் இதற்காக அந்த இயக்கங்கள் மீது சுமத்திய குற்றச்சாட்டுக்கள் எந்தளவிற்கு உண்மையானவை என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அனேகமானவை புலிகளால் சோடிக்கப்பட்டவை என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அதுமாத்திரமில்லை. காலம் செல்ல செல்ல அதே குற்றங்களை புலிகளே புரிந்தார்கள் என்பதும் எமது வரலாறாகும். எனவே இவற்றை மறந்து புலிகளின் குற்றச்சாட்டுக்களை எடைபோடுவது முட்டாள்தனமானது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற அரசியல் விடயத்தையும் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகப் பொறுப்பையும் ஒன்றாகக் கருதுவதும், அத்தியாவசிய சேவைகளை சீர்குலைப்பதும் ஏற்புடையதல்ல.

உள்ளூராட்சிசபைகள் நாடு முழுவதும் உள்ள ஒரு நிர்வாக அமைப்பு. நாடு முழுவதிலும் உள்ள அரசாங்க அதிபர் அலுவலகங்கள் பிரதேச செயலகங்கள் போன்றே மாநகரசபை, நகரசபை, பிரதேசசபைகள் செயற்பட்டு வருகின்றன.

அரசாங்க அதிகாரிகளுக்கு பதிலாக தமிழ்க்கட்சிகளை சார்ந்த, மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் கூட்டு தலமை இந்த சபைகளை நிர்வகிப்பதுதான் தேர்தலுக்குபின் நிகழ்ந்துள்ள மாற்றம்.

மலேரியா ஒழிப்பு மற்றும் தடுப்பு சேவைகள், துப்புரவும் சூழல் சுகாதாரமும், தாய்சேய் நலன், பொதுவழிகள், காணிகள், கட்டிடங்கள், சந்தைகள், ஏழைகளுக்கு வீட்டுவசதி, நீர்வழங்கல், தெருக்கள், பொது இடங்களுக்கு வெளிச்சமிடல், நூலகம்,சனசமூகநிலையங்கள், பொழுது போக்கு வசதிகள் மற்றும் இது போன்ற இன்னோரன்ன அத்தியாவசிய சேவைகளை ஸ்தாபித்தல்,பராமரித்தல், ஒழுங்குபடுத்தல் கட்டுப்படுத்தல் போன்ற பணிகளே உள்ளூராட்சிசபைகளின் பிரதான பணிகளாகும்.

மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் அத்தியாவசிய சேவை வழங்கும் மையங்களே இந்த உள்ளூராட்சி சபைகள். இப்போது தமிழ்க்கட்சிகள் இந்த சபைகளை நிர்வகிக்கும் அதிகாரத்தை கைப்பற்றியிருப்பது தான் இதற்கு ஒரு அரசியல் முக்கியத்துவத்தை, சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

யுத்தத்தினாலும் இடம்பெயர்வுகளாலும்சிதறுண்டு போயிருக்கும் யாழ் குடாநாட்டில் மக்களுக்கு உள்ளூராட்சி சபைகளின்சேவை அவசியம் என்பதைஇன்னும் இங்கு வாழ்பவர்கள் கண்மூடித் தனமாக நிராகரித்து விட முடியாது.

உள்ளூராட்சிசபைகள் இயங்குவதால்குடாநாடு வழமைக்குதிரும்பிவிட்டதாகஅரசாங்கம் கூறுவது உறுதியாகிவிடும் என்று கருதி மறுதலையாக வழமைக்கு திரும்பவில்லை என்று காட்ட சபைகள் இயங்ககூடாது என்று எண்ணுவதும் தடை போடுவதும் ஏற்புடையதல்ல.

மக்கள் நலனை அடிப்படையாக கொண்டு நோக்குவோமாயின் இவை அவசியம் என்பதை விளங்கிக்கொள்ளலாம்.

வீதிகள் புனரமைக்கப்படவில்லை; மலேரியாவின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது; தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை; மனித பாவனைக்கு உதவாத இறைச்சி வகைகள் மற்றும் உணவுப்பொருட்கள் பானவகைகள் விற்பனை செய்யப்படுகிறது என குறைகூறப்படுகிறது.

பொது சுகாதாரம், பொதுப் பாதுகாப்பட்டுச் சேவைகள், நலன்புரிச்சேவைகள், பொதுவழிகள் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களையும் ஸ்தாபித்தல் பரிபாலித்தல், பாதுகாத்தல், விருத்திசெய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள தத்துவமுடைய உள்ளூராட்சி சபையின் செயற்பாட்டை முடக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை பார்த்துக் கொண்டு வாழாவிருந்தவாறே இவ்வாறு குறைகூறுவது அர்த்தமற்றது.

இவர்களது நோக்கம் நோயை குணப்படுத்துவதல்ல, நோயாளியை கொல்வதையே நோக்கமாக கொண்டுள்ளது.

எந்த ஒரு அரசியற் கட்சிக்கும் தனிநபருக்கும் ஒரு அரசியல் கொள்கைகளை பின்பற்றவும் தேர்தலில் நிற்கவும் உள்ள அடிப்படை உரிமையை யாரும் மறுக்க முடியாது எனவும் அந்த உரிமையை ஆயுதமுனையில் புலிகள் தடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை வெளிப்படையாக குறிப்பிடுவர்களும் கூட உள்ளூராட்சி சபைகள் தமிழ்க்கட்சிகளின் தலமைத்துவத்தின் கீழ் செயற்படுவதற்கு புலிகள் தடையாய் நிற்பதற்கு காரணம்.

இதர தமிழ் அரசியல் கட்சிகள், தனிநபர்களின் உரிமைகளை நிராகரிக்கும் போக்கே அடிப்படையானது என்பதை ஏனோ கண்டுகொள்ளத்தவறிவிடுகிறார்கள்.

1986 காலப்பகுதியிலில் பொதுசேவை ஸ்தாபனங்களில் சக இயக்கங்களை சேர்ந்தவர்கள் தற்காலிக பாவனைக்காக வாகனங்களை பறித்துச் சென்ற வேளையில் அத்தியாவசிய சேவைகளை சீர்குலைத்து எமது மக்களை துன்புறுத்துகிறார்கள் என்று இதர இயக்கங்கள் மீது குற்றம் சுமத்திய புலிகள் பின்னர் அந்த இயக்கங்களின் செயற்பாட்டுக்கு தடைவிதித்த வேளையில் குற்றப்பட்டியலில் இதனையும் ஒரு குற்றச்சாட்டாக முன்வைத்தனர்.

இன்று அத்தியாவசிய சேவைகளை சீர்குலைப்பதையே தனது பிரதான போராட்ட வழிமுறையாக செயற்படுகின்றனர் அதனாலேயே கைகட்டி வாய்பொத்தி மௌனமாக தமிழ் மக்கள் அங்கீகரிக்க வேண்டிய நிலையில் இருப்பது குறித்தும் ஒருகணம் சிந்திப்போமாக.



இவர்கள் போராட்டத்தின் இலக்குகள்

யாழ்குடாநாட்டில் இராணுவ ஆக்கிரமிப்பிற்குள்ளாக்கப்பட்டிருக்கும் எமது மக்களிற்காக வேண்டுகோள்.

குருதி சிந்திய வீரசிங்கம்.....



வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவரான சுப்பையா வீரசிங்கம் தமது வீட்டில் வைத்து காயப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்த அனுராதபுரம் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார். இந்தச் செய்தி சமூக பொறுப்புணர்வும், மனித நேயமும் கொண்ட எவரையும் சிந்தை கலங்கச் செய்யக் கூடியதாகும்.

1989ம் ஆண்டு முதல் இன்றுவரை வவுனியா ப.நோ.கூ. சங்கத்தலைவராக இருந்த சு. வீரசிங்கம் கல்வி,அகதியாகவந்த மக்களின் பிரச்சினைகள், என்பவற்றில் அக்க அக்கறை காட்டியவர். மக நெருக்குதல் களுக்கும் மத்தியில் செயற்பட்டவர்.

மக்களையும், மண்ணையும் நேசித்து நிகழ்கால இடர்களைக் களைந்து எதிர்காலம் பற்றிய எண்ணங்களுடன் தொழிற்படும் பெறுமதி வாய்ந்த மனிதர்களின் உயிர்கள் எதுவிதபெறுமதியுமற்றுப் பறிக்கப்படும் கொடூரம் இதனுடனாவது முடிவுக்கு வரவேண்டும். இது பல தடவைகள் பலரால் சொல்லப்பட்டுவிட்டதுதான். எனினும் இலட்சியங்கள் என்பவற்றை விடவும் சாதாரண மனிதர்களின் உயிரும், வாழ்க்கையும் முதன்மையானது என்பது இன்னமும் உணரப்பட்டாகவில்லை என்பதற்கு இப்போதைய சான்றாக வீரசிங்கம் அவர்களின் உயிர்பறிப்பு விளங்குகின்றது.

அவலமான அநியாயமான கொலைகள் மூலம் எவரும் எந்த இலட்சியத்தையும் எய்திவிடலாம் என்பது பகற்கனவு. காரணங்கள் எதுவாக இருந்தாலும் அநியாயமான உயிர்பறிப்பு அதற்குத் தீர்ப்பாகாது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.